# ஹஜ், உம்ரா, ஜியாரத்தின் விளக்கம்

**(கூடுதல் தகவல்கள் இணைக்கப்பட்டுள்ளது)**

***தொகுப்பு:*** **மௌலவி அல்ஹாஜ் முஹம்மதலி சைபுத்தீன் ஆலிம் பாகவி காதிரி ஸூபி அவர்கள்.**

## என்னுரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் துவக்கம். அகிலத்திற்கோர் அருள் பிழம்பாய் அவதரித்த அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் கருணையும் ஈடேற்றமும் உண்டாவதாக.

وَلِلّٰهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيْلاً

அல்லாஹ்வுக்காக அவனது ஆலயத்தை அதனளவில் போய்வர சக்திபெற்ற மனிதர்கள் மீது ஹஜ்ஜுச் செய்வது கடமையாகும்.

وَاَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلّٰهِ

அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும், உம்ராவையும் பரிபூரணமாக்குவீர்களாக. – அல்-குர்ஆன் 3:97

اَلْحَجُّ الْمَبْرُوْرُ لَيْسَ لَهُ جَزَاءٌ اِلَّا الْجَنَّةَ

அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜுக்கு நற்கூலி சுவர்க்கத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

مَنْ زَارَ قَبْرِيْ وَجَبَتْ لَهُ شَفَاعَتِيْ رواه الدارقطني، والطبرانى، والبيهقى وغيرهم،

எவர் எனது கப்ரை ஸியாரத்துச் செய்தாரோ அவருக்கு எனது ஷபாஅத் கட்டாயமாகிவிட்டது.

عَنْ عَلِىٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ لَمْ يَزُرْ قَبْرِيْ فَقَدْ جَفَانِيْ ذكره البواليمن

عساكر فى كتابه الزئر مناسك ص١١٤ ج

எனது கப்ரை ஜியாரத் செய்யாதவன் எனக்கு அநீதம் செய்துவிட்டான். அறிவிப்பாளர்: அலி ரழியல்லாஹு அன்ஹு. நூல்: மானாஸிக்.,பாகம்1 பக்கம் 114.

புனித ஹஜ், உம்ரா, ஸியாரத் பற்றி பல திருவசனங்களும், பொன்மொழிகளும் வந்துள்ளன.

இவைகளை சரிவர செய்ய பல சட்டங்களை நம் சங்கைமிகு இமாம்கள் வகுத்துள்ளார்கள். அவைகளை பல நூற்களாகவும் தொகுத்தளித்துள்ளார்கள்.

இப்புனித கிரிகைகளை மேற்கொள்ள இருப்பவர்கள் இச்சட்டங்களை கற்றுக் கொள்வது கட்டாயக் கடமையாகும். இச்சட்டங்களை உள்ளடக்கிய நூற்கள் பல தமிழில் வெளிவந்தாலும், ஷாபிஈ மத்ஹப் அடிப்படையில் நம் சுன்னத் வல் ஜமாஅத்தின் உண்மையான உலமாக்களினால் எந்த நூலும் தமிழில் வந்ததாக தெரியவில்லை.

ஆகவே அக்குறையை நிவர்த்தி செய்யும் முறையில் மிக சுருக்கமான, முக்கியமான, தேவையான சட்டங்களையும் துஆக்களையும் உள்ளடக்கிய கைக்கு அடக்கமானதொரு நூல் அவசியம் வெளிவரவேண்டுமென புனித ஹஜ்ஜை நிறைவேற்றும் போதெல்லாம் உணர்த்தப்பட்டேன். அதன் விளைவாக இதோ உங்கள் கரங்களில் இந்நூல் தவழ்கின்றது அல்ஹம்துலில்லாஹ்.

புனித ஹஜ், உம்ரா, கிரிகைகளை செய்யும் ஹாஜிமார்களுக்கு சந்தேகங்கள், ஐயப்பாடுகள் இல்லாமல், சந்தோஷமாகவும், மனநிம்மதியாகவும் நிறைவேற்ற உற்றதுணையாக இந்நூல் இருக்கும் இன்ஷாஅல்லாஹ். ஜன்னத்துல் பகீஃ மதீனா பொத மையவாட்டின் வரைபடம் அட்டையின் பின்பக்கம் இணைக்கப்பட்டுள்ளது இதன் விசேஷ அம்சமாகும். அனுபவக் குறிப்புகளையும் எழுதியுள்ளேன்.

தவாபு, ஸஃயு, ஜியாரத்தை மேற்கொள்ளும் போது ஜனநெருக்கடி அதிகமாகும். அச்சமயம் இந்நூலை வைத்து ஓதுவது, பார்ப்பது கஷ்டமாகும். தவறிவிடவும் ஏதுவாகும்.

ஆகையால் அதுசமயம் மட்டும் ஓதவேண்டிய துஆக்களை தனியாக, கழுத்தில் மாட்டிக்கொண்டு பார்த்து ஓதுவதற்கு வசதியாக தனிப்பிரதி ஒன்றும் வெளியிட்டுள்ளேன்.

துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இடங்களில் உங்கள் துஆக்களில் இவ்வடியேனையும், இதற்கு உறுதுணையாக இருந்தவர்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். இதுவே எமது நோக்கம். எல்லாம் வல்ல அல்லாஹ் நதம்மனைவர்களின் எல்லா கிரியைகளையும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆக்குவானாக. ஆமீன்.

சமுதாய ஊழியன்,

**S.M.H. முஹம்மது அலி சைபுத்தீன்**

بسم الله الرحمن الرحيم

## بَيَانُ الْحَجِّ وَالْعُمْرَةِ وَالزِّيَارَةِ

**ஹஜ், உம்ரா, ஜியாரத்தின் விளக்கம்.**

வீட்டில் இருந்து புறப்படுவதற்கு முன் இரண்டு ரக்அத் اِسْتِخَارَةٌ இஸ்திகாரா தொழுகை தொழுவது சுன்னத்தாகும்.

முதல்ரக்அத்தில் பாத்திஹாவிற்குப்பின்قُلْ يَاَيُّهَا الْكَافِرُوْنَகுல்யா அய்யுஹல் காபிரூன் சூராவையும்,

இரண்டாவது ரக்அத்தில் பாத்திஹாவிற்குப் பின் اَحَدٌ اللهُ هُوَ قُلْகுல்ஹுவல்லாஹு அஹத் சூராவையும் ஓதுவது சுன்னத்தாகும்.

சலாம் கொடுத்தபின் اَيَةُ الْكُرْسِيْஆயத்துல் குர்ஸியையும், قُرَيْشٍ لِاِيْلَافِலியீலா஼பி குறைஷின் சூராவையும் ஓதுவது சுன்னத்தாகும்.

**பின்பு இதை ஓதவும்:-**

اَللّٰهُمَّ بِكَ اَسْتَعِيْنُ وَعَلَيْكَ اَتَوَكَّلُ اَللّٰهُمَّ ذَلِّلْ لِيْ صُعُوْبَةَ اَمْرِيْ وَسَهِّلْ عَلَيَّ مَشَقَّةَ سَفَرِيْ وَارْزُقْنِيْ مِنَ الْخَيْرِ اَكْثَرَ مِمَّا اَطْلُبُ وَاصْرِفْ عَنِّيْ كُلَّ شَرٍّ رَبِّ اشْرَحْ لِيْ صَدْرِيْ وَيَسِّرْ لِيْ اَمْرِيْ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْتَحْفِظُكَ وَاَسْتَوْدِعُكَ نَفْسِيْ وَدِيْنِيْ وَاَهْلِيْ وَاَقَارِبِيْ وَكُلَّ مَا اَنْعَمْتَ عَلَيَّ وَعَلَيْهِمْ بِهِ مِنْ آخِرَةٍ وَدُنْيَا فَاحْفَظْنَا اَجْمَعِيْنَ مِنْ كُلِّ سُوْءٍ يَا كَرِيْمُ اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ فِيْ سَفَرِنَا هٰذَا الْبِرَّ وَالتَّقْوٰي وَمِنَ الْعَمَلِ مَا تَرْضٰي . اَللّٰهُمَّ هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هٰذَا وَاطْوِعَنَّا بُعْدَهُ اَللهُمَّ اَنْتَ الصَّاحِبُ فِى السَّفَرِ وَالْخَلِيْفَةُ فِى الْاَهْلِ اَللّٰهُمَّ اِنِّىْ اَعُوْذُبِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ

**தொழுகை முடித்து எழுந்து நடக்கும்போது இதை ஓத வேண்டியது:-**

اَللّٰهُمَّ اِلَيْكَ تَوَجَّهْتُ وَبِكَ اِعْتَصَمْتُ اَللّٰهُمَّ اكْفِنِيْ مَا اَهَمَّنِيْ وَمَالَمْ اَهْتَمُّ بِهِ اَللّٰهُمَّ زَوِّدْنِيْ التَّقْوٰي وَاغْفِرْ لِيْ ذَنْبِيْ

**வீட்டில் இருந்து புறப்படும் போது இதை ஓதவும்:-**

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ اَنْ اُضِلَّ اَوْ اُضَلَّ اَوْ اَزِلَّ اَوْ اُزَلَّ اَوْ اَظْلِمَ اَوْ اُظْلَمَ اَوْ اَجْهَلَ اَوْ يُجْهَلَ عَلَيَّ

**புறப்பட்டபின்:-**

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ لَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ

**வாகனத்தில் ஏறியதும்:-**

اَلْحَمْدُ لِلّٰهِ سُبْحَانَ الَّذِيْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِيْنَ وَاِنَّا اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ اَلْحَمْدُ لِلّٰهِ، اَلْحَمْدُ لِلّٰهِ، اَلْحَمْدُ لِلّٰهِ، اَللّٰهُ اَكْبَرُ، اَللّٰهُ اَكْبَرُ، اَللّٰهُ اَكْبَرُ سُبْحَانَكَ اللّٰهُمَّ اِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ اِغْفِرْ لِيْ فَاِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ اَللّٰهُمَّ اِنَّا نَسْأَلُكَ فِيْ سَفَرِنَا هٰذَا الْبِرَّ وَالتَّقْوٰي وَمِنَ الْعَمَلِ مَا تُحِبُّ وَتَرْضٰي اَللّٰهُمَّ هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا وَاطْوِعَنَّا بُعْدَهُ اَللّٰهُمَّ اَنْتَ الصَّاحِبُ فِى السَّفَرِ وَالْخَلِيْفَةُ فِى الْاَهْلِ وَالْمَالِ وَالْوَلَدِ اَللّٰهُمَّ اِنَّا نَعُوْذُبِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمُنْقَلَبِ وَسُوْءِ الْمَنْظَرِ فِى الْاَهْلِ وَالْمَالِ وَالْوَلَدِ

**குறிப்பு:-** எல்லா பிரயாணத்தின் போதும் இந்த ஒழுங்குமுறையை மேற்கொள்ள வேண்டும்.

## بَيَانُ الْاِحْرَامُ

**இஹ்ராம் கட்டுவதின் விளக்கம்.**

இஹ்ராம் கட்டுவதுاِفْرَادُ– **இப்ராது,** تَمَتُّعُ -**தமத்தவு,** قِرَانُ—**கிரான்** என மூன்று வகைப்படும்.

1. افراد -இப்ராது(தனிமைபடுத்துவது) தங்களது ஊரின் مِيْقَاتُ–மீகாத்-எல்லையில் இருந்து ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டி ஹஜ் கிரிகைகளை முடித்துவிட்டு ஓய்வு எடுத்துக் கொள்வது. பின் வசதிபோல் மக்காவை விட்டும் வெளியே حل–ஹில்லுக்கு சென்று உம்ராவுக்காக இஹ்ராம் கட்டி வந்து உம்ராவின் கிரிகைகளை நிறைவு செய்வது. இது மிகவும் ஏற்றமானது. இவருக்கு தமு தேவையில்லை.

2. تمتع –தமத்தவு (சுகம் அனுபவித்தல்) தங்களது ஊரின் ميقات–மீகாத் எல்லையில் இருந்து ஹஜ்ஜுடைய மாதங்களில் உம்ராவுக்காக இஹ்ராம் கட்டி உம்ராவின் கிரிகைகளை முடித்து விட்டு ஓய்வு எடுத்துக் கொள்வது. பின்பு மக்காவில் இருந்தே ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டி ஹஜ் கிரிகைகளை நிறைவு செய்வது.

உம்ராவை முடித்து ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டுவது வரை இவர்(இஹ்ராம் இல்லாமல்) சுகம் அனுபவிப்பதினால் தமத்தவு சுகம் அனுபவிப்பது என்று சொல்லப்படுகிறது. இவருக்கு دم தமு கொடுப்பது கட்டாயமாகும். இது கிரானாக احرام இஹ்ராம் கட்டுவதை விட சிறந்ததாகும்.

3. قران கிரான்(சேர்த்தல்) தங்களது ஊரின் மீகாத் எல்லையில் இருந்து ஹஜ்ஜுக்காகவும், உம்ராவுக்காகவும் இரண்டையும் சேர்த்து இஹ்ராம் கட்டி ஹஜ்ஜுடைய கிரிகைகளை மட்டும் செய்து நிறைவு செய்வது.

உம்ராவின் கிரிகைகளை; ஹஜ்ஜின் கிரிகைகளுக்குள் சேர்ந்து விடும். இப்படி இரண்டையும் சேர்ப்பதினால் قران கிரான் (சேர்த்தல்) என்று சொல்லப்படுகின்றது. இவருக்கு دَمُ தமு கொடுப்பது கட்டாயமாகும். இம்மூன்று வகைகளில் மிக ஏற்றமானது இப்ராதாகும். அதன்பின் தமத்தவு, அதன்பின் கிரான் ஆகும்.

## بَيَانُ الدَّمُ

### தமு கொடுப்பதின் விபரம்

تمتع தமத்தவு செய்தவர், قران கிரான் செய்தவர்கள் மீது, اُضْحِيَّة உளுஹிய்யா கொடுப்பதற்கு தகுதியுள்ள ஒரு ஆடு, அல்லது ஒரு ஒட்டகத்தில் அல்லது ஒரு மாட்டில் ஏழு பங்குகளில் ஒரு பங்கு சேர்ந்து அறுப்பது வாஜிபாகும்-கட்டாயமாகும்.

இதற்கு வாய்ப்பு வசதி இல்லாவிட்டால் ஷாபிஈ மத்ஹபின் பிரகாரம் ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டியபின் (அதாவது:- துல்ஹஜ் பிறை 6,7,8 தினங்களில்) மூன்று நோன்புகள் பிடிக்க வேண்டும். பின் ஊருக்கு வந்த பின் 7 நோன்புகள் பிடிக்க வேண்டும். ஹனபி மத்ஹபின் பிரகாரம் ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டாமலும் மூன்று நோன்புகள் பிடிக்கலாம். பின் ஊருக்கு வந்தபின் 7 நோன்புகள் பிடிக்க வேண்டும்.

## بَيَانُ نِيَّةِ الْاِحْرَامِ

### இஹ்ராம் கட்டுவதின் நிய்யத் விபரம்

ஹஜ்ஜுக்கு மட்டும் இஹ்ராம் கட்டும் நிய்யத்:-

نَوَيْتُ الْحَجَّ وَاَحْرَمْتُ بِهِ لِلّٰهِ تَعَالٰى

www.sufimanzil.org

நவய்த்துல் ஹஜ்ஜ வ அஹ்ரம்து பிஹி லில்லாஹி தஆலா

அல்லாஹ் தஆலாவுக்காக ஹஜ்ஜை நிய்யத்து வைத்து அதைக் கொண்டு இஹ்ராம் கட்டிவிட்டேன்.

உம்ராவுக்கு மட்டும் இஹ்ராம் கட்டும் நிய்யத்:-

نَوَيْتُ الْحَجَّ وَالْعُمْرَةَ وَاَحْرَمْتُ بِهِمَا لِلّٰهِ تَعَالٰى

நவய்த்துல் உம்ரத்த வ அஹ்ரம்து பிஹி லில்லாஹி தஆலா

அல்லாஹ் தஆலாவுக்காக உம்ராவை நிய்யத்து வைத்து அதைக் கொண்டு இஹ்ராம் கட்டிவிட்டேன்.

ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும் சேர்த்து இஹ்ராம் கட்டும் நிய்யத்து:-

نَوَيْتُ الْحَجَّ وَالْعُمْرَةَ وَاَحْرَمْتُ بِهِمَا لِلّٰهِ تَعَالٰى

நவய்த்துல் ஹஜ்ஜ வல்உம்ரத்த அஹ்ரம்து பிஹி லில்லாஹி தஆலா

அல்லாஹ் தஆலாவுக்காக ஹஜ், உம்ராவை நிய்யத்து வைத்து, அவை இரண்டைக் கொண்டும் இஹ்ராம் கட்டிவிட்டேன்.

## தல்பிய்யா_تَلْبِيَّة

لَبَّيْكَ اَللّٰهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ لَاشَرِيْكَ لَكَ لَبَّيْكَ اِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لَاشَرِيْكَ لَكَ

லப்பைக் அல்லாஹும்ம லப்பைக், லப்பைக் லாஷரீக்க லக லப்பைக், இன்னல் ஹம்த வன்னிஃமத்த லக வல்முல்க் லாஷரீக்க லக்

தல்பிய்யாவுக்குப் பின் சலவாத்து சொல்வதும், துன்யா ஆகிரத்து சம்பந்தமான துஆக்கள் ஓதுவதும் சுன்னத்தாகும். வியப்புக்குரிய காரியத்தைப் பார்த்தால் தல்பியாவுடன் لَبَّيْكَ اِنَّ الْعَيْشَ عَيْشُ الْاٰخِرَةِ லப்பைக் இன்னல் அய்ஷ அய்ஷுல் ஆகிரா என்பதையும் சேர்த்துக் கொள்ளவும்.

# كيفية الاحرام

## இஹ்ராம் கட்டுவதின் முறைகள்

இஹ்ராம் கட்ட நாடினால் களைய வேண்டிய உரோமங்களை களைந்தும், அழுக்குகளை உடலை விட்டும் சுத்தமாக்கியும்- غسل الاحرام உஸ்லுல் இஹ்ராம் '**இஹ்ராமுடைய குளிப்பாக குளிக்கிறேன்**' என்று நிய்யத்து வைத்து குளிக்க வேண்டும்.

குளிக்க முடியாவிட்டால் 'ஒழு' செய்ய வேண்டும். அதுவும் முடியாவிட்டால் 'தயம்மம்' செய்ய வேண்டும்.

பின்பு தையல் ஆடைகளை களைந்து வெண்மையான, சுத்தமான இஹ்ராமுடைய ஆடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும். உடலில் வாசைன திரவியங்களை பூசிக் கொள்ள வேண்டும். ஆடைகளில் பூசக் கூடாது.

பெண்கள் மாதமாவிடாய் உள்ளவர்களானாலும் ஆண்களைப் போன்றே எல்லாவற்றையும் செய்ய வேண்டும். பெண்கள் தையல் ஆடைகளை அறிந்து கொள்ளலாம். முகத்தை மறைக்கக் கூடாது. ஆண்கள் தலையை மறைக்கக் கூடாது. பின்பு தொழுவது மக்ரூஹ் ஆன நேரங்களை தவிர்த்து மற்ற நேரங்களாக இருந்தால்

أُصَلِّيْ سُنَّةَ الْاِحْرَامِ رَكْعَتَيْنِ لِلّٰهِ تَعَالٰى

உஸல்லி சுன்னத்தல் இஹ்ராமி ரக்அதைனி லில்லாஹி தஆலா

'இஹ்ராமுடைய சுன்னத்தான இரண்டு ரக்அத் அல்லாஹு தஆலாவுக்காக தொழுகிறேன்' என்று தக்பீர் கட்டி இரண்டு ரக்அத் தொழ வேண்டும்.

முதல் ரக்அத்தில் பாத்திஹாவிற்குப்பின் قل يايها الكافرون **குல்யாஅய்யுஹல் காபிரூன் சூரா**வையும்,

இரண்டாம் ரக்அத்தில் பாத்திஹாவுக்குப் பின் قل هو الله احد **குல்ஹுவல்லாஹு அஹத் சூரா**வையும் ஓத வேண்டும்.

பின்பு இஹ்ராம் கட்டுவதின் விபரப்பிரகாரம் நிய்யத்து வைத்து தல்பிய்யாவை ஆண்கள் சப்தமாகவும், பெண்கள் சப்தமில்லாமலும் சொல்ல வேண்டும். அதிகமதிகம் எல்லா இடங்களிலும், நிலைகளிலும் தல்பிய்யாவை சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

طواف القدوم **தவாபுல் குதூம்** செய்யும்போதும், سعي **ஸஃயி** செய்யும் போதும் தல்பிய்யா சரியான சொல்படி சொல்லக் கூடாது. அதற்கான துஆக்களை ஓதிக் கொள்ள வேண்டும்.

طواف الافاضة **தவாபுல் இபாழா** செய்யும்போதும் நிச்சயம் தல்பிய்யா சொல்லக் கூடாது.

# بيان المحرمات بعد الاحرام

**இஹ்ராம் கட்டிய பின் செய்வது ஹராமான காரியங்கள்.**

1. தைக்கப்பட்ட ஆடைகள் அல்லது தையல் போன்று நெசவு செய்த அல்லது பசை போன்றவற்றினால் ஒட்டப்பட்ட ஆடைகளை அணிவது.

2. ஆண்கள் தலையை, தையல் ஆடைகள், அல்லது தையல் இல்லாத இதர துணிகள், தொப்பி, தலைப்பாகை முதலியவற்றைக் கொண்டு மறைப்பது.

நிழற் கூடங்கள், குடைகளுக்குக் கீழ் தலையை மறைப்பது குற்றமில்லை. கூடை , சாக்குப்பைகள், பெட்டிகள் போன்றவற்றை தலையில் வைத்து சும்பபதுவும் குற்றமில்லை.

மேல் அங்கியான லேஞ்சில் பட்டன் வைப்பது, முடிச்சுகள் போடுவது, ஊக்குகள் குத்துவது, ஒரு பக்கத்தில் கயிரை கட்டி மறுபக்கத்தில் கட்டுவது ஆகாது.

கீழ் அங்கியான வேட்டியில் முடிச்சுகள் போடுவதும், கயிறு கட்டுவதும், வார், கயிறை இடுப்பில் கட்டுவதும், மோதிரம் அணிவதும் ஆகும். பெண்களுக்கு மேற்கூறிய இரண்டு காரியங்களும் ஆகுமாகும்.

3. உடலில், உடையில், விரிப்பில் வாசைன திரவியங்களை உபயோகிப்பது அவைகளை நுகர்வது, தெளிப்பது, வாகனை எண்ணையை உடலில் தேய்ப்பது வாகனையல்லாத எண்ணெயானாலும் தலையில், தாடியில் தேய்ப்பது ஆகாது. வாசனையல்லாத எண்ணையை உடலில் தேய்ப்பதும், நுகர்வதும் ஆகும்.

4. வாடை, நிறம், ருசி தெளிவாக தெரியும்படியான மணமானவைகள் கலந்திருக்கும் உணவுப் பொருட்களை உண்ணுவது, பருகுவது.

5. தலை, மீசை, தாடி, அக்குள், மர்மஸ்தானம் மற்றும் இதர உடலின் உரோமங்களை கத்தரிப்பது, சிரைப்பது அல்லது பிடுங்குவது, நகங்களை வெட்டுவது.

6. உடலுறவு கொள்வது, இச்சையுடன் முத்தமிடுவது, கட்டி அணைப்பது, தொடுவது, பெண்குறி அல்லாத இடத்தில் உடலுறவு கொள்வது, திருமணம் செய்வது, செய்து கொடுப்பது.



www.sufimanzil.org

7. திடலிலுள்ள உண்ணப்படும் வேட்டை மிருகங்களை வேட்டையாடுவது.

**இஹ்ராம் கட்டியபின் செய்வது ஹராமான காரியங்களை செய்து விட்டால் அதற்குரிய பரிகாரம்**

மூன்று உரோமத்தை சிரைத்தால் அல்லது மூன்று நகங்களை வெட்டினால், அல்லது தையல் ஆடைகளை உடுத்தினால் அல்லது மணம் பூசினால் அல்லது தலையை மறைத்தால் அல்லது தலை, தாடிக்கு எண்ணை பூசினால் உழுஹிய்யாவுக்கு தகுதியான ஒரு ஆடு அறுத்துக் கொடுப்பது அல்லது ஆறு மிஸ்கீன்களுக்கு உணவு கொடுப்பது அல்லது மூன்று நோன்பு பிடிப்பது அவசியமாகும். இம்மூன்றில் ஏதாவதொன்றை செய்து கொள்ளலாம்.

ஒன்ஆறா, இரண்டோ உரோமத்தை நீக்கினால் அல்லது ஒன்றோ, இரண்டோ நகங்களை வெட்டினால் ஒன்றுக்கு ஒரு مد-முத்து சிறங்கை அளவு உணவும் இரண்டுக்கு இரண்டு مد-முத்து சிறங்கை அளவு உணவும் கொடுப்பது அவசியமாகும்.

வியாதியின் காரணமாக, அல்லது கடினமான உஷ்ணத்தின் காரணமாக தலைமுடியை சிரைக்க வேண்டுமானால் அல்லது கடினமான உஷ்ணம், குளிர் காரணமாக தையல் ஆடை உடுக்க வேண்டுமானால் அல்லது தலையை மறைக்க வேண்டுமானால் செய்து கொள்ளலாம். ஆனாலும் மேற்கண்ட பிரகாரம் ஒரு ஆடு, அல்லது ஆறு மிஸ்கீன்களுக்கு உணவு கொடுப்பது அல்லது மூன்று நோன்பு பிடிப்பது இதில் ஒன்றை செய்வது அவசியமாகும். வேண்டுமென்று மனமுரண்டாக உம்ராவில் அதன் கிரிகைகளை பூர்த்தியாக்குவதற்கு முன்பும், ஹஜ்ஜில் التحلل الاول-**முதல் தஹல்லுலுக்கு** முன்பும் உடலுறவு கொண்டுவிட்டால் உம்ரா, ஹஜ்ஜு கிரிகைகள் முறிந்து விடும்.

என்றாலும் முறியாவிட்டால் எவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டுமோ அதை போன்று தொடர்ந்து அக்கிரிகைகளை பூர்த்தியாக்குவதும், அடுத்து உடனடியாக கழா செய்வதும், كفارة-**குற்றப்பரிகாரம்** கொடுப்பதும் அவசியமாகும்.

**குற்றப்பரிகார விபரம் بيان الكفارة**

ஒரு ஒட்டகம் அறுத்துக் கொடுக்க வேண்டும். இது முடியாவிட்டால் மாடு அறுத்துக் கொடுக்க வேண்டு;ம். இதுவும் முடியாவிட்டால் ஏழு ஆடுகள் அறுத்துக் கொடுக்க வேண்டும். இதுவும் முடியாவிட்டால் ஒட்டகத்திற்கு விலையை மதிப்பீடு செய்து அதற்கான உணவை வாங்கி தர்மம் செய்ய வேண்டும். இதுவும் முடியாவிட்டால் உணவின் ஒவ்வொரு مد-முத்துக்கும் ஒரு நோன்பு பிடிக்க வேண்டும்.

اول تحلل–முதல் தஹல்லுலுக்குப் பின் உடலுறவு கொண்டு விட்டால் ஹஜ்ஜு முறிந்து விடாது. எனினும் ஒரு ஆடு அறுத்துக் கொடுப்பது அவசியமாகும்.

இஹ்ராமை மறந்து அல்லது ஹராம் என்று தெரியாமல் அல்லது நிர்பந்தமாக உடலுறவு கொண்டுவிட்டால் ஒன்றும் அவசியமில்லை.

## بيان التحلل

### தஹல்லுலு விபரம்

ஹஜ்ஜுக்கு இரண்டு تحلل தஹல்லுலுகள் இருக்கின்றன. சிரைத்தல், கல் எறிதல் அல்லது சிரைத்தல், தவாபு செய்தல் அல்லது கல் எறிதல், தவாபு செய்தல். இவைகளில் ஏதாவதொரு வகையை செய்துவிட்டால் اول تحلل–**முதல் தஹல்லுலு** ஏற்படுகின்றது. பெண்கள் சம்பந்தமானவைகள் அல்லாத மற்றதெல்லாம் ஹலால் ஆகிவிடுகின்றது. இவைகளில் சிரைத்தல், கல் எறிதல், தவாபு செய்தல் ஆகிய மூன்றையும் நிறைவு செய்துவிட்டால் எல்லாம் ஹலால் ஆகி விடுகின்றது.

## (٣) اركان العمرة

### உம்ராவின் கட்டாய கடமைகள்(4)

1. இஹ்ராம் கட்டுதல்.

2. தவாபு செய்தல்.

3. சஃயு செய்தல்.

4. தலை உரோமத்தை சிரைத்தல் அல்லது கத்தரித்தல்.

## (٥) اركان الحج

### ஹஜ்ஜின் கட்டாய கடமைகள்(5)

1. இஹ்ராம் கட்டுதல்

2. அரபாவில் தங்குதல்.

3. தவாபுல் இபாழா செய்தல்.

4. ஸஃயு செய்தல்.

5. தலை உரோமத்தை சிரைத்தல் அல்லது கத்தரித்தல்.

## واجبات العمرة(٢)

**உம்ராவில் அத்தியாவசியமானவைகள் (2)**

1. மீகாத்தில் இருந்து இஹ்ராம் கட்டுவது.

2. இஹ்ராமில் தடுக்கப்படவைகளை விட்டும் தவிர்த்துக் கொள்வது.

## واجبات العمرة(٦)

**ஹஜ்ஜில் அத்தியாவசியமானவைகள் (6)**

1. ميقات—மீகாத்தில் இருந்து இஹ்ராம் கட்டுவது

2. رمي جمرة العقبة ஜம்ரத்துல் அகபாவில் கல் றிதல்

3. அரபாவில் பகலில் ஒரு பகதியையும், இரவில் ஒரு பகுதியையும் சேகரித்தது போல் தங்குவது.(இது வாஜிப் என்பதில் அபிப்பிராய பேதகம் இருக்கிறது. சரியான சொல் வாஜிபு என்பதாகும்)

4. مزدلفة–முஸ்தலிபாவில் பத்தாவது இருவு தங்குவது.

5. கல் எறிவதற்காக மூன்று நாட்கள் مني-மினாவில் இரவு தங்கி கல் எறிவது.

6. طواف الوداع இறுதி தவாபு செய்தல்.

## سنن الحج

**ஹஜ்ஜில் சுன்னத்தானவைகள்**

அர்கானு(கட்டாயக் கடமைக)ளும், வாஜிபாத்து(அத்தியாவசியமானவை)களும் அல்லாதவைகள் அனைத்தும் சுன்னத்தானவைகள்தான்.

(உ.ம்.) طواف القدوم புனித மக்கா நன்னகருக்கு போனவுடன் செய்யும் **தவாபுல் குதூம்**, அவ்ராதுகள், திக்ருகள், துஆக்கள் ஹஜருல் அஸ்வத் கல்லை வாயால் , கையால், சமிக்ஞை செய்து முத்தமிடுவது, ஆண்களுக்கு **ரமலு முந்திய மூன்று தவாபில்** رمل-சுற்றில் வேகமாக நடையை சுருக்கி செல்லுதல், اضطباع இழ்திபாஃ இஹ்ராமில் வலது புஜத்தை திறந்ததும், இடது புஜத்தை மறைத்தும் இருப்பது மற்றும் இவை போன்றவைகளாகும்.

## الفرق بين الاركان والواجبات والسنن

- **اركان – واجبات – سنن ருக்னுகள், வாஜிபாத்துகள், சுன்னத்துகள் இடையில் வித்தியாசங்கள்**

ஹஜ், உம்ரா கிரிகைகளில் கூறப்பட்ட اركان–**கட்டாயக் கடமைகளில்** ஒன்றை விட்டுவிட்டாலும் அதை செய்து முடிக்காதவரை ஹஜ், உம்ரா நிறைவேறாது. இஹ்ராமை விட்டு நீங்கவும் முடியாது. واجبات–**அத்தியாவசியமானவைகளில்** ஒன்றை விட்டுவிட்டால் دم–**தமு- ஒரு ஆடு அறுத்துக் கொடுப்பது** அவசியமாகும். ஹஜ்ஜும், உம்ராவும் நிறைவேறிவிடும்.

வேண்டுமென்று விட்டால் குற்றவாளியாகுவான். மறந்தவனாகவிட்டால் குற்றவாளி அல்ல. سنن –சுன்னத்தானவைகளை விட்டுவிட்டால் எதுவும் அவன்மீது இல்லை. குற்றவாளியும் அல்ல. எனினும் அவனுக்கு பூரணத்துவமான சிறப்புகள், நன்மைகள் தப்பி விடுகின்றன.

## دخول مكة المكرمة

**சங்கைமிகு புனித மக்கா ஷரீபில் நுழைவது**

புனித மக்காவை அடைவதற்கு முன் மக்காவிற்கு வெளியே குளிப்பது சுன்னத்தாகும். மக்காவில் நுழைந்து கண்ணால் கஃபாவை கண்டதும் ஓத வேண்டிய துஆ:-

**கஃபாவை கண்ணால் கண்டதும் ஓதும் துஆ**

اَللّٰهُمَّ زِدْ هٰذَا الْبَيْتَ تَشْرِيْفًا وَّتَكْرِيْمًا وَّتَعْظِيْمًا وَمَهَابَةً وَزِدْ مَنْ شَرَّفَهُ وَعَظَّمَهُ مِمَّنْ حَجَّهُ وَاعْتَمَرَ تَشْرِيْفًا وَتَكْرِيْمًا وَتَعْظِيْمًا وَبِرًّا

اَللّٰهُمَّ اَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّلَامُ فَحَيِّنَا رَبَّنَا بِالسَّلَامِ

பின் தீன் துன்யாவின் காரியங்களை வேண்டிக் கொள்ளவும் பின் ஹஜருல் அஸ்வதை முன்னோக்கி வந்து முத்த வேண்டும். அதன் மீது ஸுஜூது செய்ய வேண்டும். தவாபுல் குதூமை ஆரம்பம் செய்ய வேண்டும். மஸ்ஜிதுல் ஹராமில் நுழையும் போதெல்லாம் கீழ்காணும் துஆவை ஓத வேண்டும்.

**மஸ்ஜிதுல் ஹராமில் நுழையும்போதும் வெளியேறும் போதும் ஓதும் துஆ**

اَعُوْذُ بِاللّٰهِ الْعَظِيْمِ وَبِوَجْهِهِ الْكَرِيْمِ وَسُلْطَانِهِ الْقَدِيْمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ بِسْمِ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ

مُحَمَّدٍ وَسَلِّمْ اَللّٰهُمَّ اغْفِرْلِيْ ذُنُوْبِيْ وَافْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ

வெளியாகும்போது رَحْمَتِكَ என்ற இடத்தில் என்று மாற்றி ஓத வேண்டும்.

நுழையும் போது வலதுகாலை முன்வைத்தும் வெளியாகும்போது இடதுகாலை முன்வைத்தும் போக வேண்டும்.

## بيان انواع الطواف

**தவாபுகளின் வகைகள் விபரம்**

அவை மூன்று வகைப்படும்.

1. طَوَافُ الْقُدُوْمِ **தவாபுல் குதூம்.** இது புனித மக்கா நன்னகருக்கு போனதும் செய்யும் தவாபு. இதற்கு ஐந்து பெயர்கள் உண்டு.

1. طَوَافُ الْقُدُوْمِ 2. طَوَافُ الْقَادِمِ 3. طَوَافُ الوُرُوْدِ 4. طَوَافُ الْوَارِدِ 5. طَوَافُ التَّحِيَّةِ

இது சுன்னத்தாகும். வாஜிபு அல்ல. இதை விட்டுவிட்டால் எதுவும் அவசியமாகாது.

2. طَوَافُ الْاِفَاضَةِ **தவாபுல் இபாழா.** இது அரபாவில் தங்கிய பின் பத்தாம் இரவு நடுநிசிக்குப் பின் செய்யும் தவாபு. இதற்கும் ஐந்து பெயர்கள் உண்டு.

1. طَوَافُ اْلاِفَاضَة 2. طَوَافُ الزِّيَارَة 3. طَوَافُ الفَرْض 4. طَوَافُ الرُّكن 5. طَوَافُ الصّدْرُ

இது ركن **கட்டாய கடமையாகும்**. இதை செய்யாவிட்டால் ஹஜ் நிறைவேறாது. இதற்கு دم–**தமு** போன்ற பரிகாரம் எதுவும் இல்லை.

3. طَوَافُ الْوِدَاع **தவாபுல் விதா:.** இது ஹஜ் கிரிகைகள் அனைத்தையும் நிறைவேற்றிய பின் புனித மக்காவை விட்டும் புறப்படும்போது செய்யும் தவாபு.

طَوَافُ الصَّدْر **இதற்கு தவாபுல் சத்ரு** என்ற பெயரும் உண்டு. சரியான சொல்படி இது வாஜிபாகும்.

ركن–கட்டாயக் கடமையல்ல. இன்னுமொரு சொல்படி சுன்னத்தாகும். இம்மூன்றுமல்லாத தவாபுகள் சுன்னத்தானவைகளாகும். வசதிபோல் எவ்வளவும் செய்து கொள்ளலாம்.

புறப்படும் சமயம் மாதவிடாய் ஏற்பட்டுவிட்டால் இந்த طَوَافُ الْوِدَاعதவாபுல் விதா: செய்யாமல் புறப்படலாம். எவ்வித دم–தமுவும் வாஜிபில்லை.

## كيفية اطواف

### தவாபு செய்யும் முறைகள்.

ஹஜருல் அஸ்வத் கல்லை முன்னோக்கி அதை வாயால் முத்தமிட வேண்டும். பின் அதன்மீது நெற்றியை வைத்து சுஜூது செய்ய வேண்டும். முத்துவதையும் சுஜூது செய்வதையும் மும்மூன்று தடவை செய்ய வேண்டும். பின் கொஞ்சம் பின்வாங்கி க:பாவை முன்னோக்கி ஹஜருல் அஸ்வத்தை இவன் வலது பக்கமாகவும், ருக்'னுல் யமானியை அவன் இடது பக்கமாகவும் நின்று கொண்டு தவாபு செய்வதை நிய்யத்து வைத்துக் கொண்டு,

نَوَيْتُ الطَّوَافَ لِلّٰهِ تَعَالٰى فَيَسِّرْهُ لِيْ وَتَقَبَّلْهُ مِنِّيْ

நவைத்துத் தவாப லில்லாஹி தஆலா ப:யஸ்ஸிர்ஹு லீ வதகப்பல்ஹு மின்னி

என்று சொல்லி மீண்டும் ஹஜ்ருல் அஸ்வதை கையால் தொட்டு முத்திக் கொள்ள வேண்டும். பின் அதன்மீது ஸுஜூதும் செய்ய வேண்டும். பின் இரு கைகளையும் உயர்த்தி..........

بِسْمِ اللهِ اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து

என்று சொல்லி பின்வரும் துஆவை ஓதிக் கொள்ளவேண்டும்.

اَللّٰهُمَّ اِيمَانًا بِكَ وَتَصْدِيْقًا بِكِتَابِكَ وَوَفَاءً بِعَهْدِكَ وَاِتِّبَاعًا لِسُنَّةِ نَبِيِّكَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

அல்லாஹும்ம ஈமானன் பிக வதஸ்தீகன் பிகிதாபிக வ வபஃஅன் பிஅஹ்திக வஇத்திபாஅன் லி ஸுன்னதி நபிய்யிக்க முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

இதன்பின் ஹஜருல் அஸ்வதை முன்னோக்கியபடி வலது பக்கம் நகர வேண்டும். அதை முழுமையாக கடந்ததும் கஃபாவை இடதுபக்கமாக்கி திரும்பி வலம் சுற்ற வேண்டும்.

**குறிப்பு:** ஹஜ்ஜுடைய காலங்களில் ஜன நெருக்கடி அதிகமாக இருப்பதால் மேற்கண்ட முறையை முழுமையாக செய்ய முடியாது. ஹஜருல் அஸ்வத் கல்லை முன்னோக்கி தரையில் சிவப்பு நிறக்கோடு கல்லினால் போடப்பட்டுள்ளது. அதில் நின்று கொண்டு நிய்யத்து வைத்து கையை உயர்த்தி சமிக்ஞை செய்த கையை முத்திக் கொண்டு துஆக்களை ஓதி தவாபை ஆரம்பிக்க வேண்டும். ஹஜருல் அஸ்வத்துக்கும் கஃபா வாசலுக்கும் மத்தி பகுதிக்கு முல்தஸம் என்று சொல்லப்படும். இந்த இடத்தில் கீழ்காணும் துஆவை ஓதிக் கொள்ள வேண்டும்.

### முல்தஸம் என்னுமிடத்தில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ يَا رَبَّ الْبَيْتِ الْعَتِيْقِ اَعْتِقْ رِقَابَنَا وَرِقَابَ آبَائِنَا وَاُمَّهَاتِنَا وَاِخْوَانِنَا وَاَوْلَادِنَا مِنَ النَّارِ يَا ذَالْجُوْدِ وَالْكَرَمِ وَالْفَضْلِ وَالْمَنِّ

وَالْعَطَاءِ وَالْاِحْسَانِ، اَللّٰهُمَّ اَحْسِنْ عَاقِبَتَنَا فِى الْاُمُوْرِ كُلِّهَا وَاَجِرْنَا مِنْ خِزْيِ الدُّنْيَا وَعَذَابِ الْاٰخِرَةِ اَللّٰهُمَّ اِنِّيْ عَبْدُكَ وَابْنُ عَبْدِكَ

وَاقِفٌ تَحْتَ بَابِكَ مُلْتَزِمٌ بِاَعْتَابِكَ مُتَذَلِّلٌ بَيْنَ يَدَيْكَ اَرْجُوْ رَحْمَتَكَ وَاَخْشٰى عَذَابَكَ يَا قَدِيْمَ الْاِحْسَانِ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ اَنْ تَرْفَعَ

ذِكْرِيْ وَتَضَعَ وِزْرِيْ وَتُصْلِحَ اَمْرِيْ وَتُطَهِّرَ قَلْبِيْ وَتُنَوِّرَ لِيْ فِيْ قَبْرِيْ وَتَغْفِرَ لِيْ ذَنْبِيْ وَاَسْأَلُكَ الدَّرَجَاتِ الْعُلٰى مِنَ الْجَنَّةِ آمِيْنْ

வாசல் பக்கம் வந்ததும்:-

اَللّٰهُمَّ اِنَّ هٰذَا الْبَيْتَ بَيْتُكَ وَالْحَرَمَ حَرَمُكَ وَالْاَمْنَ اَمْنُكَ وَهٰذَا مَقَامُ الْعَائِذِ بِكَ مِنَ النَّارِ

என்று ஓத வேண்டும்.

இரண்டாவது தூணை அடைந்ததும் கீழ்வரும் துஆவை ஓத வேண்டும்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الشَّكِّ وَالشِّرْكِ وَالشِّقَاقِ وَالنِّفَاقِ وَسُوْءِ الْاَخْلَاقِ وَسُوْءِ الْمُنْقَلَبِ فِى الْمَالِ وَالْاَهْلِ وَالْوَلَدِ

மழை தண்ணீர் விழும் ميزاب–மீஸாப் என்னும் மடையை எதிர் கொண்டதும் இதை ஓத வேண்டும்

اَللّٰهُمَّ اَظِلَّنِيْ فِيْ ظِلِّكَ يَوْمَ لَا ظِلُّكَ وَاسْقِنِيْ بِكَأْسِ نَبِيِّكَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَشْرَبًا هَنِيْئًا لَا اَظْمَأُ بَعْدَهُ اَبَدًا .

மூன்றாவது, நான்காவது தூண்களுக்கிடையில்,

اَللّٰهُمَّ اَجْعَلْهُ حَجًّا مَبْرُوْرًا وَسَعْيًا مَشْكُوْرًا وَعَمَلًا مَقْبُوْلًا وَتِجَارَةً لَنْ تَبُوْرَ ، يَا عَزِيْزُ يَا غَفُوْرُ ،

என்று ஓத வேண்டும்.

நான்காவது தூணை அடைந்ததும் அதை கையால் தொட்டு முத்தமிட வேண்டும்.

**குறிப்பு:-** ஹஜருல் அஸ்வதை தவிர வேறு எதையும் வாயால் முத்தமிடக் கூடாது. ருக்னுல் யமானி எனும் நான்காவது தூணைத் தவிர எதையும் கையால் தொட்டு முத்தக் கூடாது.

அதன்பின் ஹஜருல் அஸ்வதை அடைந்துவிட்டால் முதல் சுற்று நிறைவடைந்து விடுகிறது. இப்படியே ஏழு சுற்றுகள் சுற்றிவர வேண்டும். ஒவ்வொரு சுற்றிலும் அதற்கான விசேஷமான துஆக்கள் இருக்கின்றன. முடிந்தால் ஓத வேண்டும். முடியாவிட்டால்.....

رَبَّنَا آتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَفِى الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

என்பதை மடக்கி மடக்கி ஓதினால் போதுமாகும்.

குறிப்பு:- ஜன நெருக்கடியினால் அல்லது பிறருக்கு நோவினை ஏற்படும் என்ற பயத்தினால் ஹஜருல் அஸ்வதை வாயால் முத்தமிட இயலாமலாகி விட்டால் கையால் தொட்டு கையை முத்த வேண்டும். அதுவும் முடியாமல் ஆகிவிட்டால் கம்பால் தொட்டு கம்பை முத்தமிட வேண்டும். அதுவும் முடியாவிட்டால் கையை அதன்பக்கம் சமிக்ஞை செய்து முத்திக் கொள்ள வேண்டும்.

طَوَافُ الْقُدُوْمِ **தவாபுல் குதூமுக்குப்** பின்னும் ஸஃயு செய்யலாம். அல்லது தவாபுல் இபாழாவுக்குப் பின்னும் ஸஃயு செய்யலாம். தவாபு செய்தபின் ஸஃயு செய்யும் நாட்டம் இருந்தால் தவாபின் முந்திய மூன்று சுற்றிலும் رمل–ரமலு-வேகமாக நடைளை சுருக்கி செல்லுவதையும், اضطباع–இழுத்திபாஃவை வலது புஜத்தை திறந்தும் இடது புஜத்தை மறைத்தும் செய்வது சுன்னத்தாகும்.

மற்ற நான்கு சுற்றிலும் ரமலும், இழுத்திபஃவும் சுன்னத் அல்ல. சஃயு செய்ய வேண்டிய நாட்டம் இல்லாத சுன்னத்தான எல்லா தவாபு சுற்றிலும் இவை இரண்டும் சுன்னத் இல்லை. மற்ற நேரங்களில் இஹ்ராம் உடையில் இருக்கும்போதும் இழுத்திபாஃ சுன்னத் அல்ல.

## الشوط الاول (١) دعاء முதல் சுற்று துஆ

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا اِلٰهَ اِلَّا اللهُ وَاللهُ اَكْبَرُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، اَللّٰهُمَّ اِيْمَانًا بِكَ وَتَصْدِيْقًا بِكِتَابِكَ وَوَفَاءً بِعَهْدِكَ وَاِتِّبَاعًا لِسُنَّةِ نَبِيِّكَ وَحَبِيْبِكَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ وَالْمُعَافَاةَ الدَّائِمَةَ فِى الدِّيْنِ وَالدُّنْيَا وَالْآخِرَةِ وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ،

## الشوط الثاني (٢) دعاء இரண்டாம் சுற்று துஆ

اَللّٰهُمَّ اِنَّ هٰذَا الْبَيْتَ بَيْتُكَ وَالْحَرَمَ حَرَمُكَ وَالْاَمْنَ اَمْنُكَ وَالْعَبْدَ عَبْدُكَ وَاَنَا عَبْدُكَ وَابْنُ عَبْدِكَ وَهٰذَا مَقَامُ الْعَائِذِ بِكَ مِنَ النَّارِ فَحَرِّمْ لُحُوْمَنَا وَبَشَرَتَنَا عَلَى النَّارِ ، اَللّٰهُمَّ حَبِّبْ اِلَيْنَا الْاِيْمَانَ وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا وَكَرِّهْ اِلَيْنَا الْكُفْرَ وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِيْنَ، اَللّٰهُمَّ قِنِيْ عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ، اَللّٰهُمَّ ارْزُقْنِيَ الْجَنَّةَ بِغَيْرِ حِسَابًا،

## الشوط الثالث (٣) دعاء மூன்றாம் சுற்று துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنَ الشِّرْكِ وَالشِّقَاقِ وَالنِّفَاقِ وَسُوْءِ الْاَخْلَاقِ وَسُوْءِ الْمَنْظَرِ وَالْمُنْقَلَبِ فِى الْمَالِ وَالْاَهْلِ وَالْوَلَدِ، اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ رِضَاكَ وَالْجَنَّةَ وَاَعُوْذُبِكَ مِنْ سَخَطِكَ وَالنَّارِ ، اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ فِتْنَةِ الْقَبْرِ وَاَعُوْذُبِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ،

## الشوط الرابع (٤) دعاء நான்காம் சுற்று துஆ

اَللّٰهُمَّ اجْعَلْهُ حَجًّا مَبْرُوْرًا وَسَعْيًا مَشْكُوْرًا وَذَنْبًا مَغْفُوْرًا وَعَمَلًا صَالِحًا مَقْبُوْلًا وَتِجَارَةً لَنْ تَبُوْرَ يَا عَالِمَ مَا فِي الصُّدُوْرِ اَخْرِجْنِيْ يَا اَللهُ مِنَ الظُّلُمَاتِ اِلَى النُّوْرِ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ مَغْفِرَتِكَ وَالسَّلَامَةَ مِنْ كُلِّ اِثْمٍ وَالْغَنِيْمَةَ مِنْ كُلِّ بِرٍّ وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ ، رَبِّ قَنِّعْنِيْ بِمَا رَزَقْتَنِيْ وَبَارِكْ لِيْ فِيْمَا اَعْطَيْتَنِيْ وَاخْلُفْ عَلَيَّ كُلَّ غَائِبَةٍ لِيْ مِنْكَ بِخَيْرٍ،

## الشوط الخامس (٥) دعاء ஐந்தாம் சுற்று துஆ

اَللّٰهُمَّ اَظِلَّنِيْ تَحْتَ ظِلِّ عَرْشِكَ يَوْمَ لَا ظِلَّ اِلَّا ظِلُّكَ وَلَا بَاقِيَ اِلَّا وَجْهُكَ وَاَسْقِنِيْ مِنْ حَوْضِ نَبِيِّكَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ شَرْبَةً هَنِيْئَةً مَرِيْئَةً لَا نَظْمَأُ بَعْدَهَا اَبَدًا اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ مِنْ خَيْرِ مَا سَاَلَكَ مِنْهُ نَبِيُّكَ سَيِّدُنَا مُحَمَّدٌ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاَعُوْذُبِكَ مِنْ شَرِّ مَا اسْتَعَاذَكَ مِنْهُ نَبِيُّكَ سَيِّدُنَا مُحَمَّدٌ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ الْجَنَّةَ وَنَعِيْمَهَا وَمَا يُقَرِّبُنِيْ اِلَيْهَا مِنْ قَوْلٍ اَوْفِعْلٍ اَوْعَمَلٍ وَاَعُوْذُبِكَ مِنَ النَّارِ وَمَا يُقَرِّبُوْنِيْ اِلَيْهَا مِنْ قَوْلٍ اَوْفِعْلٍ اَوْعَمَلٍ،

## الشوط السادس (٦) دعاء ஆறாம் சுற்று துஆ

اَللّٰهُمَّ اِنَّ لَكَ عَلَيَّ حُقُوْقًا كَثِيْرَةً فِيْمَا بَيْنِيْ وَبَيْنَكَ وَحُقُوْقًا كَثِيْرَةً فِيْمَا بَيْنِيْ وَبَيْنَ خَلْقِكَ اَللّٰهُمَّ مَا كَانَ لَكَ مِنْهَا فَاغْفِرْلِيْ وَمَا كَانَ لِخَلْقِكَ فَتَحَمَّلْهُ عَنِّيْ وَاَغْنِنِيْ بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ وَبِطَاعَتِكَ عَنْ مَعْصِيَّتِكَ وَبِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ يَا وَاسِعَ الْمَغْفِرَةِ اَللّٰهُمَّ اِنَّ بَيْتَكَ عَظِيْمٌ وَوَجْهَكَ كَرِيْمٌ وَاَنْتَ يَا اَللهُ حَلِيْمٌ كَرِيْمٌ عَظِيْمٌ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّيْ،

## الشوط السابع (٧) دعاء ஏழாம் சுற்று துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ اِيْمَانًا كَامِلًا وَيَقِيْنًا صَادِقًا وَرِزْقًا وَاسِعًا وَقَلْبًا خَاشِعًا وَلِسَانًا ذَاكِرًا وَحَلَالًا طَيِّبًا وَتَوْبَةً نَصُوْحًا وَتَوْبَةً قَبْلَ الْمَوْتِ وَرَاحَةً عِنْدَ الْمَوْتِ وَمَغْفِرَةً وَرَحْمَةً بَعْدَ الْمَوْتِ وَالْعَفْوَ عِنْدَ الْحِسَابِ وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ بِرَحْمَتِكَ يَا عَزِيْزُ يَا غَفَّارُ رَبِّ زِدْنِيْ عِلْمًا وَاَلْحِقْنِيْ بِالصَّالِحِيْنَ،

## தவாபின் வாஜிபுகள் 8(٨)واجبات الطواف

1.ஆண்கள், பெண்கள் அவர்களுக்குரிய மறைக்க வேண்டிய இடங்களை மறைத்தல். பெண்களின் தலைமுடியில் ஒரு மடி வெளியானாலும் அல்லது காலின் ஒரு பகுதி தெரிந்தாலும், அந்த சுற்று நிறைவேறாது. அதை கணக்கில் எடுக்கக் கூடாது.

ஹனபி மத்ஹபின் படி கால் பகுதி மறைக்க வேண்டிய இடமில்லை. அதன்படி காலின் பகுதி தெரிந்தாலும் தவாப் கூடிவிடும்.

2. பெரிய, சிறிய தொடக்குகளை விட்டும் உடலில், ஆடையில், சுற்றும் இடத்தில் நஜீஸை விட்டும் சுத்தமாக இருத்தல்.

**குறிப்பு:** சிறிய தொடக்கு இல்லாமல் அதாவது: உழுவுடன் தவாபு செய்து முடிப்பது இக்காலத்தில் சாத்தியமில்லை. ஹனபி மத்ஹபில் பெண்களை தொட்டால் உழுவு முறியாது என்றிருப்பதால் அந்த மத்ஹபில் மாறி இருக்கிறேன் என்று நினைத்து ஒழுவு செய்து தவாபு செய்தால் பெண்கள் தொட்டாலும் கூட தவாபு நிறைவேறி விடும். இதுதவிர வேறு வழியில்லை. மத்ஹபுகளின் சட்டங்கள் மாறுவது உம்மத்தினர்களுக்கு ரஹ்மத் - அருளாகும்.

3. மஸ்ஜதுல் ஹராமின் உட்பகுதியில் சுற்றுதல்

4. ஏழு சுற்றுகளை பரிபூரணமாக்குதல். சந்தேகம் ஏற்பட்டால் குறைந்த எண்ணிக்கையை எடுத்துக் கொண்டு நிறைவுபடுத்த வேண்டும்.

5.ஹஜருல் அஸ்வத் கல்லிலிருந்து ஆரம்பித்தல்.

6. கஃபாவை இவனுக்கு இடது பக்கமாக்கி வாசல் பக்கமாக சுற்றுவது.

7. ஹிஜ்ரு இஸ்மாயீல் என்பதற்கு வெளியே சுற்றுவது.

**குறிப்பு:** ஹிஜ்ரு இஸ்மாயீல் என்பது கஃபாவின் உட்பகுதியாகும். அதனால் வெளி பகுதியில்தான் சுற்ற வேண்டும். தவாபு முடிந்தபின்பும், மற்றய நேரங்களிலும் ஹிஜ்ரு இஸ்மாயீலில் தொழுதால் கஃபாவின் உட்பகுதியில் தொழுத மாதிரியாகும். இங்கே இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அவர்களின் தாயார் ஹாஜரா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அடக்கமாகி இருக்கிறார்கள் என்றும் மீஸாபுக்கும் இரண்டாம் தூணுக்கும் மத்தியில் அடக்கமாகி இருப்பதாகவும் கஃபாவை சுற்றிலும் ஒரு சொல்படி 300 நபிமார்கள் என்றும், இன்னொரு சொல்படி 70 நபிமார்கள் அடக்கமாகி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அல்லாஹ் மிக அறிந்தவன்.

8. இவனது உடல் பூராவும் கஃபாவின் அனைத்து பகுதிளை விட்டும் வெளியே இருக்க வேண்டும்.

**குறிப்பு:** தவாபு செய்யும் போது கஃபாவையோ அல்லது கஃபாவின் எந்த பகுதியையோ அல்லது ஹிஜ்ரு இஸ்மாயீல் சுவரையோ பிடித்துக் கொண்டோ, தடவிக் கொண்டோ தவாபு செய்தால் அந்த தவாபு நிறைவேறாது.

## தவாபின் சுன்னத்துகள்سنن الطواف

மேற்கண்ட வாஜிபுகள் அல்லாத துஆக்கள்رمل–ரம்லு, اضطباعஇழ்திபாஃ போன்றவைகளாகும்.

## مقام ابراهيم عليه السلام

### மகாமு இப்றாஹீம்

தவாபு கிரிகைகள் முடிந்ததும் مقام ابراهيم-மகாமு இப்றாஹீம் என்ற இடத்தின் பின்பக்கம் நின்று இரண்டு ரக்அத் தொழுவது சுன்னத்தாகும். தொழுகைக்கு முன் اضطباعஇழ்திபாஃ கோலத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். அதன்பின்,....

أُصَلِّيْ سُنَّةَ الطَّوَافِ رَكْعَتَيْنِ لِلّٰهِ تَعَالٰى

உஸல்லி சுன்னத்தத் தவாபி ரக்அதைனி லில்லாஹி தஆலா

தவாபுடைய சுன்னத்தான இரண்டு ரக்அத்தை அல்லாஹு தஆலாவுக்காக தொழுகிறேன் என்று நிய்யத்து வைத்து தக்பீர் கட்டி முதல் ரக்அத்தில் பாத்திஹாவுக்குப் பின் குல்யாஅய்யுஹல் காபிரூன் என்ற சூராவையும், இரண்டாம் ரக்அத்தில் பாத்திஹாவுக்குப் பின் குல்ஹுவல்லாஹு அஹத் என்ற சூராவையும் ஓத வேண்டும்.

☆ ☆ ☆ ☆ ☆

## دعاء مقام ابراهيم عليه السلام

### மகாமு இப்றாஹீம் துஆ

اَللّٰهُمَّ اِنَّكَ تَعْلَمُ سِرِّيْ وَعَلَانِيَتِيْ فَاقْبَلْ مَعْذِرَتِيْ وَتَعْلَمُ حَاجَتِيْ فَاَعْطِنِيْ سُؤْلِيْ وَتَعْلَمُ مَا فِيْ نَفْسِيْ فَاغْفِرْلِيْ ذُنُوْبِيْ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ اِيْمَانًا يُبَاشِرُ قَلْبِيْ وَيَقِيْنًا صَادِقًا حَتّٰى اَعْلَمَ اَنَّهُ لَا يُصِيْبُنِيْ اِلَّا مَا كَتَبْتَ لِيْ رِضًا مِثْلَ بِمَا قَسَمْتَ لِيْ اَنْتَ وَلِيِّيْ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ تَوَفَّنِيْ مُسْلِمًا وَالْحِقْنِيْ بِالصَّالِحِيْنَ، اَللّٰهُمَّ لَا تَدَعْ لَنَا فِيْ مَقَامِنَا هٰذَا ذَنْبًا اِلَّا غَفَرْتَهُ وَلَا هَمًّا اِلَّا فَرَّجْتَهُ وَلَا حَاجَةً اِلَّا قَضَيْتَهَا وَيَسَّرْتَهَا فَيَسِّرْ اُمُوْرَنَا وَاشْرَحْ صُدُوْرَنَا وَنَوِّرْ قُلُوْبَنَا وَاخْتِمْ بِالصَّالِحَاتِ اَعْمَالَنَا اَللّٰهُمَّ تَوَفَّنَا مُسْلِمِيْنَ وَاَحْيِنَا مُسْلِمِيْنَ وَالْحِقْنَا بِالصَّالِحِيْنَ غَيْرَ خَزَايَا وَلَا مَفْتُوْنِيْنَ،

## ஹிஜ்று இஸ்மாயீல் துஆ — دعاء حجر اسماعيل عليه السلام

اَللّٰهُمَّ اَنْتَ رَبِّيْ لَا اِلٰهَ اِلَّا اَنْتَ خَلَقْتَنِيْ وَاَنَا عَبْدُكَ وَاَنَا عَلٰى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ اَعُوْذُبِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ اَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَاَبُوْءُ بِذَنْبِيْ فَاغْفِرْلِيْ فَاِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا سَأَلَكَ بِهِ عِبَادُكَ الصَّالِحُوْنَ وَاَعُوْذُبِكَ مِنْ شَرِّ مَا اسْتَعَاذَكَ مِنْهُ عِبَادُكَ الصَّالِحُوْنَ اَللّٰهُمَّ بِاَسْمَآئِكَ الْحُسْنٰى وَصِفَاتِكَ الْعُلْيَا طَهِّرْ قُلُوْبَنَا مِنْ كُلِّ وَصْفٍ يُبَاعِدُنَا عَنْ مُشَاهَدَتِكَ وَمَحَبَّتِكَ وَاَمِتْنَا عَلَى السُّنَّةِ وَالْجَمَاعَةِ وَالشَّوْقِ اِلٰى لِقَائِكَ يَا ذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ، اَللّٰهُمَّ نَوِّرْ بِالْعِلْمِ قَلْبِيْ وَاسْتَعْمِلْ بِطَاعَتِكَ بَدَنِيْ وَخَلِّصْ مِنَ الْفِتَنِ سِرِّيْ وَاشْغُلْ بِالْاِعْتِبَارِ فِكْرِيْ وَقِنِيْ شَرَّ وَسَاوِسِ الشَّيْطَانِ وَاَجِرْنِيْ مِنْهُ يَا رَحْمٰنُ حَتّٰى لَا يَكُوْنَ لَهُ عَلَيَّ سُلْطَانٌ رَبَّنَا اِنَّنَا اٰمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ،

## الدعاء عند شرب ماء زمزم

### ஜம்ஜம் தண்ணீர் அருந்தும் போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ عِلْمًا نَافِعًا وَرِزْقًا وَاسِعًا وَشِفَاءً مِنْ كُلِّ دَاءٍ وَسَقَمٍ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ اِنِّيْ قَدْ بَلَغَنِيْ عَنْ نَبِيِّكَ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنَّهُ قَالَ مَاءُ زَمْزَمَ لِمَا شُرِبَ لَهُ

ஹாஜத்துகள், நாட்டங்கள் நிறைவேற நிய்யத்து வைத்து வயிறு நிரம் அருந்த வேண்டும்.

(மேலும் விபரத்தை விஷேச இணைப்பு 4-ம், 5-ம் குறிப்புகளைப் பார்க்க...)



www.sufimanzil.org

## ஸஃயு செய்யும் விபரம்بيان اسعي

மகாமு இப்றாஹீமில் இருந்து ஹஜருல் அஸ்வத் கல்லின் பக்கம் வந்து அதை கையால் தொட்டுவிட்டு சபா என்னும் வாசல் வழியாக சென்று சஃயு செய்ய வேண்டும். ஜன நெருக்கடி இருந்தால் கையால் சமிக்ஞை செய்து முத்திக் கொண்டு செல்ல வேண்டும்.

சபாவைக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும். சபாவை அடைந்ததும் கிப்லாவை முன்னோக்கி نَوَيْتُ السَّعْيَ لِلّٰهِ تَعَالٰى **நவைத்து சஃயலில்லாஹி தஆலா, அல்லாஹ் தஆலாவுக்காக சஃயு செய்கிறேன்** என்று நிய்யத்து வைக்க வேண்டும். பின் இதை ஓத வேண்டும்.

اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ اَللهُ اَكْبَرُ عَلٰى مَا هَدَانَا وَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى مَا اَوْلَانَا لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ يُحْيِيْ وَيُمِيْتُ بِيَدِهِ الْخَيْرُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ لَا اِلٰهَ اَلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ اَنْجَزَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهُ لَا اِلٰهَ اِلَّا اللهُ وَلَا نَعْبُدُ اِلَّا اِيَّاهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ ، اَللّٰهُمَّ اِنَّكَ قُلْتَ وَقَوْلُكَ الْحَقُّ اُدْعُوْنِيْ اَسْتَجِبْ لَكُمْ وَاِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ وَاِنِّيْ اَسْئَلُكَ كَمَا هَدَيْتَنِيْ لِلْاِسْلَامِ اَنْ لَا تَنْزِعَهُ مِنِّيْ وَاَنْ تَتَوَفَّانِيْ مُسْلِمًا ،

மேற்கூறியதை மூன்று தடவை சொல்ல வேண்டும். பின் சபாவில் இருந்து மர்வா நோக்கி போக வேண்டும். பச்சைக்கோடு (பச்சை டியூப்லைட்) வரும்போது ஆண்களில் முடிந்தவர்கள் மட்டும் அதிவேகமாக நடக்க வேண்டும்.

மர்வா அடைந்ததும் ஒரு தடவை ஆகும். சபாவில் ஓதியபடியே கிப்லாவை முன்னோக்கி இங்கேயும் அதை ஓத வேண்டும். பின் சபாவுக்கு வர வேண்டும். இது இரண்டாவது தடவையாகும். இப்படியாக ஏழு தடவை போய்வர வேண்டும். சபாவில் ஆரம்பித்து மர்வாவில் முடிக்க வேண்டும் மேற்கண்ட துஆக்களையே மூன்று மூன்று தடவை ஓதிவர வேண்டும். இடையிடையே கீழ்காணும் துஆவை அடிக்கடி ஓத வேண்டும்.

رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ اِنَّكَ اَنْتَ الْاَعَزُّ الْاَكْرَمُ اَللّٰهُمَّ رَبَّنَا اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ ، اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ يَّطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَاِنَّ اللهَ شَاكِرٌ عَلِيْمٌ

வசதிபட்டால் ஒவ்வொரு தொங்கோட்டத்துக்கான துஆக்களை ஓதிக் கொள்ளவும்.

**குறிப்பு:** வசதிப்படவில்லையானால், அல்லது ஓத தெரியாவிட்டால்

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

ரப்பனா ஆதினா பித்துன்யா ஹசனதன் வ பில் ஆகிரதி ஹசனதன் வகினா அதாபன்னார் போன்ற தனக்குத் தெரிந்த பாமான துஆக்களை ஓதி வர வேண்டியது.

## முதல் தொங்கோட்ட துஆ دعاء الشوط الاول من السعي

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ كَبِيْرًا وَالْحَمْدُ لِلّٰهِ كَثِيْرًا وَسُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهِ بُكْرَةً وَاَصِيْلًا وَمِنَ اللَّيْلِ فَاسْجُدْ لَهُ وَسَبِّحْهُ لَيْلًا طَوِيْلًا لَااِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهُ اَنْجَزَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهُ لَا شَيْءَ قَبْلَهُ وَلَا بَعْدَهُ يُحْيِي وَيُمِيْتُ وَهُوَ حَيٌّ دَائِمٌ لَا يَمُوْتُ وَلَا يَفُوْتُ اَبَدًا بِيَدِهِ الْخَيْرُ وَاِلَيْهِ الْمَصِيْرُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ (رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ اِنَّكَ اَنْتَ الْاَعَزُّ الْاَكْرَمُ) رَبَّنَا نَجِّنَا مِنَ النَّارِ سَالِمِيْنَ غَانِمِيْنَ فَرِحِيْنَ مُسْتَبْشِرِيْنَ مَعَ عِبَادِكَ الصَّالِحِيْنَ مَعَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَاءِ وَالصَّالِحِيْنَ وَحَسُنَ اُولٰئِكَ رَفِيْقًا ذَالِكَ الْفَضْلُ مِنَ اللّٰهِ وَكَفٰى بِاللّٰهِ عَلِيْمًا لَااِلٰهَ اِلَّا اللّٰهُ حَقًّا حَقًّا لَااِلٰهَ اِلَّا اللّٰهُ تَعَبُّدًا وَرِقًّا لَااِلٰهَ اِلَّا اللّٰهُ وَلَا نَعْبُدُ اِلَّا اِيَّاهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللّٰهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ يَّطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَاِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيْمٌ.

## இரண்டாம் தொங்கோட்ட துஆ دعاء الشوط الثاني من السعي

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ لَااِلٰهَ اِلَّا اللّٰهُ الْوَاحِدُ الْفَرْدُ الصَّمَدُ الَّذِيْ لَمْ يَتَّخِذْ صَاحِبَةً وَلَا وَلَدًا وَلَمْ يَكُنْ لَهُ شَرِيْكٌ فِي الْمُلْكِ وَلَمْ يَكُنْ لَهُ وَلِيٌّ مِّنَ الذُّلِّ وَكَبِّرْهُ تَكْبِيْرًا اَللّٰهُمَّ اِنَّكَ قُلْتَ فِيْ كِتَابِكَ الْمُنَزَّلِ اُدْعُوْنِيْ اَسْتَجِبْ لَكُمْ دَعَوْنَاكَ رَبَّنَا فَاغْفِرْ لَنَا كَمَا اَمَرْتَنَا اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ رَبَّنَا اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِيْ لِلْاِيْمَانِ اَنْ آمِنُوْا بِرَبِّكُمْ فَآمَنَّا رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّئَاتِنَا وَتَوَفَّنَا مَعَ الْاَبْرَارِ رَبَّنَا وَآتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيَامَةِ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ، رَبَّنَا عَلَيْكَ تَوَكَّلْنَا وَاِلَيْكَ اَنَبْنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِاِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا بِالْاِيْمَانِ وَلَا تَجْعَلْ فِيْ قُلُوْبِنَا غِلًّا لِّلَّذِيْنَ اٰمَنُوْا رَبَّنَا اِنَّكَ رَءُوْفٌ

رَّحِيْمٌ (رَبِّ سُوْرَةُ اغْفِرْ وَارْحَمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ اِنَّكَ اَنْتَ الْاَعَزُّ الْاَكْرَمُ) اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ

فَلَا جُنَاحَ عَلَيْهِ اَن يَّطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَاِنَّ اللهَ شَاكِرٌ عَلِيْمٌ

## மூன்றாம் தொங்கோட்ட துஆ دعاء الشوط الثالث من السعي

اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ رَبَّنَا اَتْمِمْ لَنَا نُوْرَنَا وَاغْفِرْ لَنَا اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ رَحْمَتَكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ (رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ اِنَّكَ اَنْتَ الْاَعَزُّ الْاَكْرَمُ) رَبِّ زِدْنِيْ عِلْمًا وَلَا تُزِغْ قَلْبِيْ بَعْدَ اِذْ هَدَيْتَنِيْ وَهَبْ لِيْ مِنْ لَّدُنْكَ رَحْمَةً اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ سَمْعِيْ وَبَصَرِيْ لَا اِلٰهَ اِلَّا اَنْتَ اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ لَا اِلٰهَ اِلَّا اَنْتَ سُبْحَانَكَ اِنِّيْ كُنْتُ مِنَ الظَّالِمِيْنَ، اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْكُفْرِ وَالْفَقْرِ، اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوْبَتِكَ وَاَعُوْذُ بِمَ مِنْكَ لَا اُحْصِيْ ثَنَاءً عَلَيْكَ اَنْتَ كَمَا اَثْنَيْتَ عَلٰى نَفْسِكَ فَلَكَ الْحَمْدُ حَتّٰى تَرْضٰى اِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ اَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ اَنْ يَّطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَاِنَّ اللهَ شَاكِرٌ عَلِيْمٌ،

## நான்காம் தொங்கோட்ட துஆ دعاء الشوط الرابع من السعي

சுன்னத் என்பதின் பிரகாரம் தமு கொடுப்பது சுன்னத்தாகும். மூன்று நாட்களையுமே விட்டுவிட்டாலும் ஒரு தமுதான் வாஜிபாகும். ஒருநாள் விட்டுவிட்டால் ஒரு முத்து சிறங்கை அளவு உணவு கொடுக்க வேண்டும்.

உயிருக்கோ, பொருளுக்கோ ஆபத்து ஏற்படும் என்ற பயம் இருந்தால், அல்லது சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு வியாதி இருந்தால் அல்லது நோயாளியை கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் இவ்விரவுகளில் தங்குவதை விட்டுவிடலாம். எதுவும் இதனால் கடமையில்லை.(முஸ்தலிபாவில் தங்குவதை விட்டுவிட்டால் தங்குவது வாஜிபு என்ற பலமான சொல் பிரகாரம் அதற்கு தனியானதொரு தமு கொடுப்பது வாஜிபாகும்)

11-ம் நாள் மினாவில் இரவு தங்கி 21-கற்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த கற்கள் مزدلفةமுஸ்தலிபாவிலும் முன் சொன்னதுபோல் எடுத்திருக்கலாம். மினாவிலும் எடுத்துக் கொள்ளலாம்.

சூரியன் உச்சி சாய்ந்ததும் லுஹர் தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன்பாகவே 1) جمرة الاولى **முதல் கல்வீச்சு** இடத்திற்கு வந்து அதை தனக்கு இடதுபுறமாக்கி கிப்லாவை முன்னோக்கி ஏழு கற்களை உவ்வொன்றாக வீசியபின் தக்பீர் சொல்ல வேண்டும். பின் அதைவிட்டும் அகன்று அதன்பின்புறம் வந்து கிப்லாவை முன்னோக்கி துஆ سبحان الله- الحمد لله — الله اكبر சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் போன்றவற்றை சொல்லிக் கொள்ள வேண்டும்.

பின்பு 2) جمرة الوسطى **இரண்டாம் கல்வீச்சு -** நடு கல்வீச்சு இடத்திற்கு வந்து முன் சொன்னதுபோல் ஏழு கற்களை ஒவ்வொன்றாக வீச வேண்டும். இங்கும் கொஞ்சநேரம் நின்று துஆ சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் போன்ற திக்ருகளை செய்து கொள்ள வேண்டும்.

பின்பு 3) جمرة العقبة **மூன்றாம் கல்வீச்சு** –கடைசி கல்வீச்சு இடத்திற்கு வந்து முன்னால் வீசியது போலும் (10-ம் நாள் கல் வீசிய இடம்தான்) வீச வேண்டும். வீசி முடிந்ததும் அங்கிருந்து போய்விட வேண்டும். பின் லுஹர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

இதே போல்தான் 12ம், 13ம் நாட்களிலும் இரவு தங்கி சூரியன் உச்சி சாய்ந்த பின் கற்கள் வீச வேண்டும்.

**குறிப்பு:-** இந்நேரத்தில் கல்அடிக்க ஜனங்கள் பெரும் திரளாக முண்டியத்துக் கொண்டிருப்பர்கள். சமாளிக் முடியாத கஷ்டமும் உயிருக்கு ஆபத்தும்கூட ஏற்படும். அதனால் ழுஹர், அஸர் தொழுகைகளை நமது தரிப்பிடத்திலேயே நிறைவேற்றியபின் சென்று கனல் அடித்தால் மிக வசதியாக இருக்கும், சூரியன் மறைவ'துவரை இதற்கான நேரம் இருக்கிறது. ஸுப்ஹு நேரம் வருவதற்கு முன்வரை இருக்கிறது என்று ஒரு சொல்லும் இருக்கிறது. இதற்குள் செய்யாது பின்னால் செய்தாலும் அது கழா அல்லா, அதாவுதான். இதேபோன்று தான் பத்தாம் hள் கல் அடிக்கும் ட்டமும். இதையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு ஜனநெருக்கடியை தவிர்த்துக் கொள்ளவும்.

12ம் நாள் கற்கள் அடித்துவிட்டு புறப்படுவதானாலும் புறப்பட்டு போய் விடலாம். அன்றைய சூரியன் மறைவதற்குள் புறப்பட்டு போய்விட வேண்டும்.

புறப்படுவதற்கு முன்பே சூரியன் மறைந்துவிட்டால் அன்றிரவு அங்கு தங்கிவிட வேண்டும். உச்சி சாய்ந்த பின் கற்கள் அடிக்கவும் வேண்டும். கல் அடிப்பதற்காக ஒவ்வொரு நாளும் குறிப்பது சுன்னத்தாகும்.

www.sufimanzil.org

மூன்று நாட்கள் கல் அடித்ததும் புனித மக்கா நகர் நோக்கி புறப்பட்டு வாதியுல் முஹ்ஸப்-وادي المحصبமக்காவின் கப்ரஸ்தானின் பக்கம் இருக்கிற இடத்திற்கு வந்தடைய வேண்டும். இத்துடன் புனித ஹஜ் கிரிகைகள் பூர்த்தியாகின்றது. அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் الحمد لله رب العالمينசர்வ புகழும் அல்லாஹ்வுக்கே.

மக்கமா நகரில் இருக்கும் காலத்தில் அதிகமதிகமாக உம்ராக்கள் செய்தும், தவாபுகள் செய்தும் கஃபாவை கண்ணால் கண்டு கொண்டும் இருக்க வேண்டும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ طَافَ بِالْبَيْتِ خَمْسِيْنَ مَرَّةً خَرَجَ مِنْ ذُنُوْبِهِ كَيَوْمِ وَلَدَتْهُ أُمُّهُ رواه الترمذي وفي رواية مَنْ طَافَ بِالْبَيْتِ خَمْسِيْنَ أُسْبُوْعًا كَانَ كَمَا وَلَدَتْهُ أُمُّهُ

எவனொருவன் பைத்துல்லாஹ் (கஃபத்துல்லாஹ்)வை ஐம்பது தடவை, இன்னொரு அறிவிப்பில் ஐம்பது வாரம் தவாபு செய்தானோ அவன் அன்று பிறந்த பாலகன் போலாவான். அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ஆதாரம்: திர்மிதி

ஒரே வேளையில் தவாபு செய்து முடிக்க வேண்டுமென்பதில்லை. அவனது பட்டோலையில் ஐம்பது என்பது இருக்க வேண்டுமென்பதேயாகும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ اللهَ يُنْزِلُ فِيْ كُلِّ يَوْمٍ وَلَيْلَةٍ مِائَةً وَعِشْرِيْنَ رَحْمَةً عَلٰى هٰذَا الْبَيْتِ سِتُّوْنَ لِطَّائِفِيْنَ وَأَرْبَعُوْنَ لِلْمُصَلِّيْنَ وَعِشْرُوْنَ لِنَّاظِرِيْنَ اخرجه الطبراني وغيره

**கஃபாவின் மீது ஒவ்வொரு நாளும் 120 ரஹ்மத்துகள் இறங்குகின்றன. தவாபு செய்கிறவர்களுக்கு 60 ம் தொழுகிறவர்களுக்கு 40 ம் கண்ணால் காண்கிறவர்களுக்கு 20 ம்** கிடைப்பதாக சொல்லப்படுகிறது. இது போன்ற வாய்ப்பு கிடைப்பது அரிது. பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மக்கமா நகரை விட்டும் புறப்படும் போது طواف الوداع **தவாபுல் விதா:** முன்னால் கூறிய தவாபுக்குரிய முறைப்படி தவாபு செய்ய வேண்டும்.

## இறுதி தவாபின் விளக்கம் بَيَانُ طَوَافِ الْوِدَاعِ

பிரயாணத்திற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டு கடைசியாக கஃபாவுக்கு வந்து

نَوَيْتُ طَوَافَ الْوِدَاعِ لِلّٰهِ تَعَالٰى

நவைத்து தவாபல் விதாயி லில்லாஹி தஆலா

என்று நிய்யத்து வைத்து தவாபில் சொன்னபடி தவாபு செய்ய வேண்டும். பின் இரண்டு ரக்அத்....

اُصَلِّيْ سُنَّةَ الطَّوَافِ رَكْعَتَيْنِ لِلّٰهِ تَعَالٰى

உஸல்லி சுன்னத்த தவாபி ரக்அதைனி லில்லாஹி தஆலா

தவாபுடைய சுன்னத்தான இரண்டு ரக்அத்தை அல்லாஹுத்தஆலாவுக்காக தொழுகிறேன் என்று நிய்யத்து வைத்து தக்பீர் கட்டி முதல் ரக்அத்தில் பாத்திஹாவுக்குப் பின் குல்யாஅய்யுஹல் காபிரூன் என்ற சூராவையும், இரண்டாம் ரக்அதத்தில் பாத்திஹாவுக்குப் பின் குல்ஹுவல்லாஹு அஹத் என்ற சூறாவையும் ஓதி தொழ வேண்டும்.

பின்பு கஃபாவின் வாசலுக்கும் ஹஜருல் அஸ்வத் கல்லிற்கும் மத்தியில் இருக்கும் முல்தஸம் எனும் இடத்தில் நின்று கொண்டு கீழ்வரும் துஆவை ஓத வேண்டும்.

اَللّٰهُمَّ اِنَّ الْبَيْتَ بَيْتُكَ وَالْعَبْدَ عَبْدُكَ وَابْنُ عَبْدَيْكَ حَمَلْتَنِيْ عَلٰى مَا سَخَّرْتَ لِيْ مِنْ خَلْقِكَ حَتّٰى صَيَّرْتَنِيْ فِيْ بِلَادِكَ وَبَلَّغْتَنِيْ

بِنِعْمَتِكَ حَتّٰى اَعَنْتَنِيْ عَلٰى قَضَاءِ مَنَاسِكِكَ فَاِنْ كُنْتَ رَضِيْتَ عَنِّيْ فَازْدَدْ عَنِّيْ رِضًا وَاِلَّا فَمُنَّ الْآنَ قَبْلَ اَنْ تَنْأٰى عَنْ بَيْتِكَ دَارِيْ

وَيَبْعُدَ عَنْهُ مَزَارِيْ، هٰذَا اَوَانُ اِنْصِرَافِيْ اِنْ اَذِنْتَ لِيْ غَيْرَ مُسْتَبْدِلٍ بِكَ وَلَا بِبَيْتِكَ وَلَا رَاغِبٍ عَنْكَ وَلَا عَنْ بَيْتِكَ، اَللّٰهُمَّ فَاَصْحِبْنِيْ

الْعَافِيَةَ فِيْ بَدَنِيْ وَالْعِصْمَةَ فِيْ دِيْنِيْ وَاَحْسِنْ مُنْقَلَبِيْ وَارْزُقْنِي الْعَمَلَ بِطَاعَتِكَ مَا اَبْقَيْتَنِيْ وَاجْمَعْ لِيْ خَيْرَيِ الدُّنْيَا وَالْآخِرَةِ اِنَّكَ عَلٰى

كُلِّ شَيْءٍ قَدِيْرٌ، وَصَلَّى اللّٰهُ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ اَجْمَعِيْنَ،

பின்பு புறப்பட்டுவிட வேண்டும். புறப்படாமல் நின்று கொண்டிருந்தால், அல்லது பிரயாணத்திற்கு சம்பந்தமில்லாத காரியங்களில் ஈடுபட்டால் طواف الوداع தவாபுல் விதாஃ ஆக இந்த தவாபை கருதப்படாது. திரும்பவும் தவாபு செய்ய வேண்டும். இந்த தவாபுல் விதாஃவை மாதவிடாய் உள்ள பெண்கள் செய்யாமலும் دم தமு எதுவும் கொடுக்காமலும் புறப்பட்டு விடலாம். குற்றமில்லை.

ஆனால் இவர்கள் طواف الافاضة தவாபுல் இபாழா செய்யாமலிருந்தால் இதை செய்து முடிக்காமல் மக்காவை விட்டும் புறப்பட முடியாது.

ஹனபி மத்ஹபின்படி கட்டுக்கள் போட்டுக் கொண்டு தவாபு செய்ய வேண்டும். சுத்தமில்லாமல் தவாபு செய்வது ஹராமானாலும் தவாபு நிறைவேறிவிடும். எனினும் ஒரு ஒட்டகம் அறுத்துக் கொடுக்க வேண்டும்.நிபந்த கட்டத்தில் இந்த மத்ஹபின்படி அமல் செய்து கொள்ளலாம்.

## زیارة قبر سیدنا ومولانا رسول الله صلی الله علیه وسلم وشرف وکرم وعظم

**புனித ஜியாரத்தின் விளக்கம்**

புனித மதீன நகர் கட்டிடங்கள், மரங்கள் கண்ணுக்கு தென்பட்டதும்,

اَللّٰهُمَّ اِنَّ هٰذَا حَرَمُ نَبِيِّكَ وَقَدْ حَرَّمْتَهُ عَلٰى لِسَانِهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاجْعَلْهُ وِقَايَةً لِّيْ مِنَ النَّارِ،

என்று ஓத வேண்டும்.

பின் அவன் தங்கும் விடுதிக்கு சென்று குறித்து உயரிய ஆடைகளை உடுத்தி மணம் பூசிக் கொள்ளவும். தான, தர்மங்கள் செய்து கொள்ளவும். தவ்பா-பாவமன்னிப்பும் செய்து கொள்ளவும். அதிகமதிகம் ஸலவாத்து ஓதிக் கொள்ளவும். மதீனா பள்ளிவாசலின் باب السلام பாபுஸ்ஸலாம் எனும் வாசல் அடைந்ததும்,

رَبِّ اَدْخِلْنِيْ مُدْخَلَ صِدْقٍ وَاَخْرِجْنِيْ مُخْرَجَ صِدْقٍ وَاجْعَلْ لِّيْ مِنْ لَّدُنْكَ سُلْطَانًا نَصِيْرًا ، اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى اٰلِهٖ

وَصَحْبِهٖ وَاغْفِرْ لِيْ ذُنُوْبِيْ وَافْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ وَاَدْخِلْنِيْ فِيْهَا يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ،

என்று ஓதி வலதுகாலை முன்வைத்து நுழைய வேண்டும். روضة من رياض الجنة **ரவ்லத்து மின்ரியாளுல் ஜன்னாஹ்-சுவர்க்கத்தின் பூங்காக்களில் ஒரு பூங்காவாக** இருக்கும்

புண்ணியமான கப்ரு ஷரீபுக்கும், மிம்பருக்கும் மத்திபமான இடமாகும். இவ்விடத்தில் வெள்ளை விரிப்பு விரிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் மிம்பருக்கு அருகாமையில் தஹிய்யத்துல் மஸ்ஜித் - பள்ளிவாசல் காணிக்கை தொழுகை இரண்டு ரக்அத் தொழுக வேண்டும். இவ்விடம் தொழ கிடைக்காவிட்டால் வேறு இடத்தில் தொழுது கொள்ளலாம்.

தொழுதபின் இந்த அளவுக்கு உபகாரம் செய்ததற்கு அல்லாஹுதஆலாவிற்கு ஷுக்ரு –நன்றி செய்து பூரணமாக எல்லா வணக்கங்களை செய்வதற்கும் இப்புனித ஜியாரத்தை ஏற்றுக் கொள்வதற்கும் துஆ செய்ய வேண்டும். இந்த துஆவையும் ஓதிக் கொள்ள வேண்டும்.

اَللّٰهُمَّ اِنَّ هٰذِهٖ رَوْضَةٌ مِنْ رِيَاضِ الْجَنَّةِ شَرَّفْتَهَا وَكَرَّمْتَهَا وَنَوَّرْتَهَا بِنُوْرِ نَبِيِّكَ وَحَبِيْبِكَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاحْشُرْنِيْ فِيْ

زُمْرَتِهٖ وَاَمِتْنَا عَلٰى مَحَبَّتِهٖ وَسُنَّتِهٖ وَاسْقِنَا مِنْ حَوْضِهٖ وَبِيَدِهِ الشَّرِيْفَةِ هَنِيْئَةً لَا نَظْمَأُ بَعْدَهَا اَبَدًا اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

பின்பு நபிகள் நாயகத்தின் புனித கப்ரு ஷரீபை ஜியாரத் செய்ய வரவேண்டும். கிப்லாவை பின்நோக்கி கப்ரு ஷரீபை முன்னோக்கி கண்ணை தாழ்த்தி பயபக்தி நிறைந்த பரவசத்தோடும், மன உருக்கத்தோடும் சலாம் சொல்ல வேண்டும்.

اَلسَّلَامُ عَلَيْكَ يَا رَسُوْلَ اللهِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا نَبِيَّ اللهِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا خِيَرَةَ اللهِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا خَيْرَ خَلْقِ اللهِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا

حَبِيْبَ اللهِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا نَذِيْرُ اَلسَّلَامُ عَلَيْكَ يَا بَشِيْرُ اَلسَّلَامُ عَلَيْكَ يَا طُهْرُ اَلسَّلَامُ عَلَيْكَ يَا طَاهِرُ اَلسَّلَامُ عَلَيْكَ يَا نَبِيَّ الرَّحْمَةِ

اَلسَّلَامُ عَلَيْكَ يَا نَبِيَّ الْاُمَّةِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا اَبَا الْقَاسِمِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا رَسُوْلَ رَبِّ الْعَالَمِيْنَ اَلسَّلَامُ عَلَيْكَ يَا خَيْرَ الْخَلَائِقِ

اَجْمَعِيْنَ اَلسَّلَامُ عَلَيْكَ يَا قَائِدَ الْغُرِّ الْمُحَجَّلِيْنَ اَلسَّلَامُ عَلَيْكَ وَعَلٰى آلِكَ وَاَهْلِ بَيْتِكَ وَاَزْوَاجِكَ وَذُرِّيَّتِكَ وَاَصْحَابِكَ اَجْمَعِيْنَ

اَلسَّلَامُ عَلَيْكَ وَعَلٰى سَائِرِ الْاَنْبِيَآءِ وَجَمِيْعِ عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ جَزَاكَ اللهُ يَا رَسُوْلَ اللهِ عَنَّا اَفْضَلَ مَا جَزٰى نَبِيًّا وَرَسُوْلًا عَنْ اُمَّتِه

وَصَلَّى اللهُ عَلَيْكَ كُلَّمَا ذَكَرَكَ ذَاكِرٌ وَغَفَلَ عَنْ ذِكْرِكَ غَافِلٌ اَفْضَلَ وَاَكْمَلَ وَاَطْيَبَ مَا صَلّٰى عَلٰى اَحَدٍ مِنَ الْخَلْقِ اَجْمَعِيْنَ اَشْهَدُ اَنْ

لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّكَ عَبْدُهٗ وَرَسُوْلُهٗ وَخِيَرَتُهٗ مِنْ خَلْقِهٖ وَاَشْهَدُ اَنَّكَ قَدْ بَلَّغْتَ الرِّسَالَةَ وَاَدَّيْتَ الْاَمَانَةَ

وَنَصَحْتَ الْاُمَّةَ وَجَاهَدْتَّ فِي اللهِ حَقَّ جِهَادِهٖ اَللّٰهُمَّ وَآتِهِ الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَابْعَثْهُ مَقَامًا مَحْمُوْدَنِ الَّذِيْ وَعَدْتَّهٗ آتِهٖ نِهَايَةَ مَا

يَنْبَغِيْ اَنْ يَّسْاَلَهُ السَّائِلُوْنَ ، اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ عَبْدِكَ وَرَسُوْلِكَ النَّبِيِّ الْاُمِّيِّ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَاَزْوَاجِهٖ وَذُرِّيَّتِهٖ كَمَا صَلَّيْتَ عَلٰى

اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ وَبَارِكْ عَلٰى مُحَمَّدِنِ النَّبِيِّ الْاُمِّيِّ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَاَزْوَاجِهٖ وَذُرِّيَّتِهٖ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ

اِبْرَاهِيْمَ فِى الْعَالَمِيْنَ اِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ.

அதிக நேரம் நின்று சலாம் சொல்ல வாய்ப்பில்லாவிட்டால்,

اَلسَّلاَمُ عَلَيْكَ يَا رَسُوْلَ اللهِ اَلسَّلاَمُ عَلَيْكَ اَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ

என்று சொல்லிக் கொண்டால் போதுமாகும்.

வேறு நபர்கள் சலாம் சொல்லும்படி சொல்லி அனுப்பி இருந்தால், இன்ன இன்ன நபர்கள் யா ரஸூலல்லாஹ் உங்களுக்கு சலாம் சொன்னார்கள் என்று சொல்ல வேண்டும்.

பின்பு வலது பக்கம் ஒரு முழம் நகர்ந்து நின்று அமீருல் முஃமினீன் **ஹழ்ரத் அபூபக்ரு சித்தீக்** ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு....

اَلسَّلاَمُ عَلَيْكَ يَا اَبَا بَكْرٍ صَفِيَّ رَسُوْلِ اللهِ وَثَانِيَهُ فِى الْغَارِ جَزَاكَ اللهُ عَنْ اُمَّةِ نَبِيِّهٖ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ خَيْرًا اَلسَّلاَمُ عَلَيْكَ يَا خَلِيْفَةَ رَسُوْلِ اللهِ اَلسَّلاَمُ عَلَيْكَ يَا صَاحِبَ رَسُوْلِ اللهِ اَللّٰهُمَّ ارْضَ عَنْهُ وَارْفَعْ دَرَجَتَهُ وَاَكْرِمْ مَقَامَهُ وَاَجْزِلْ ثَوَابَهُ بِفَضْلِكَ وَكَرَمِكَ آمِيْنَ.

என்று சலாம் சொல்ல வேண்டும்.

பின்பு வலது பக்கம் ஒரு முழம் நகர்ந்து நின்று அமீருல் முஃமினீன் **உமர்** ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு......

اَلسَّلاَمُ عَلَيْكَ يَا عُمَرُ اَعَزَّ اللهُ بِكَ الْاِسْلاَمَ جَزَاكَ اللهُ عَنْ اُمَّتِهٖ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ خَيْرًا ، اَلسَّلاَمُ عَلَيْكَ يَا نَاطِقًا بِالْعَدْلِ وَالصَّوَابِ ، اَلسَّلاَمُ عَلَيْكَ يَا اَبَا الْفُقَرَاءِ وَالضُّعَفَاءِ وَالْاَرَامِلِ وَالْاَيْتَامِ اَللّٰهُمَّ ارْضَ عَنْهُ وَارْفَعْ دَرَجَتَهُ وَاَكْرِمْ مَقَامَهُ وَاَجْزِلْ ثَوَابَهُ بِفَضْلِكَ وَكَرَمِكَ آمِيْنَ

என்று சலாம் சொல்ல வேண்டும்.

பின்பு முதன்மையாக நின்ற இடத்திற்கு வந்து ரஸூலுல்லாஹ்வின் திருமுகத்திறகு நேராக நின்று அவர்களைக் கொண்டு வஸீலா, ஷபாஅத்தை வேண்டிக் கொள் வேண்டும். இதில் மிகவும் அழகானது ஓர் காட்டு அரபி வந்து கேட்ட துஆவாகும்.

وَلَوْ اَنَّهُمْ اِذْ ظَّلَمُوْا اَنْفُسَهُمْ جَاءُوْكَ فَاسْتَغْفَرُوا اللهَ وَاسْتَغْفَرَ لَهُمُ الرَّسُوْلُ لَوَجَدُوا اللهَ تَوَّابًا رَّحِيْمًا

وَقَدْ جِئْتُكَ مُسْتَغْفِرًا مِنْ ذَنْبِيْ مُسْتَشْفِعًا بِكَ اِلٰى رَبِّيْ:

يَا خَيْرَ مَنْ دُفِنَتْ بِالْقَاعِ اَعْظُمُهُ

فَطَابَ مِنْ طِيْبِهِنَّ الْقَاعُ وَالْاُكُمُ

نَفْسِيْ فِدَاءٌ لِقَبْرٍ اَنْتَ سَاكِنُهُ

فِيْهِ الْعَفَافُ وَفِيْهِ الْجُوْدُ وَالْكَرَمُ

اَنْتَ الشَّفِيْعُ الَّذِيْ تُرْجٰى شَفَاعَتُهُ

عَلَى الصِّرَاطِ اِذَا مَازَلَّتِ الْقَدَمُ

وَصَاحِبَاكَ فَلَا اَنْسَاهُمَا اَبَدًا

مِنِّي السَّلَامُ عَلَيْكُمْ مَا جَرَي الْقَلَمُ

قبر عمر رضي الله عنه

قبر ابی بکر رضي الله عنه

قبر النبي صلى الله عليه وسلم

பாபுஸ்ஸலாம் → பாபுல் பகீ:. →

பின்பு தலைமாட்டிற்கு பக்கம் வந்து கப்ரு ஷரீபிற்கும். தூணுக்கும் மத்தியில் நின்று கிப்லாவை முன்னோக்கி அல்லாஹ்வை புகழ்ந்து தனக்கு முக்கியமானவைகள், விருப்பமானவைகளை கேட்டுக் கொள்ளவும். தனது பெற்றோர்கள், ஷெய்குமார்கள், உறவினர்கள், சகோதரர்கள், அன்பர்கள் மற்றும் இதர முஸ்லிம்கள் அனைவர்களுக்காகவும் துஆ செய்து கொள்ளவும். பின்பு ரவ்ழா ஷரீபுக்கு வந்து அதிகமதிகமாக துஆக்கள், ஸலவாத்துக்கள் சொல்லிக் கொள்ளவும்.

قَالَ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَا بَيْنَ قَبْرِيْ وَمِنْبَرِيْ رَوْضَةٌ مِنْ رِيَاضِ الْجَنَّةِ النَّبِيُّ

**'எனது கப்ருக்கும். மிம்பருக்கும் மத்தியிலுள்ள பகுதி சுவர்க்கத்தின் பூங்காக்களில் ஒரு பூங்காவாகும்'** என்றும்,

وَمِنْبَرِيْ عَلٰى حَوْضِيْ رواه البخاري ومسلم

**'எனது மிம்பரு எனது ஹவ்ழுவின் மீது இருக்கிறது'** என்றும் நபிகள் நாயகம் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே மிம்பர் பக்கத்தில் நின்றும் துஆ செய்ய வேண்டியது. மதீனாவில் தங்கியிருக்கும் காலம் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பள்ளியிலேயே ஐந்து நேரத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنَّهُ قَالَ مَنْ صَلّٰى فِى مَسْجِدِيْ اَرْبَعِيْنَ صَلَاةً كُتِبَ لَهُ بَرَاءَةٌ مِنَ النَّارِ

وَبَرَاءَةٌ مِنَ الْعَذَابِ وَبَرِئَ مِنَ النِّفَاقِ اخرجه احمد

ஒருவன் எனது பள்ளியில் நாற்பது (நேரத்) தொழுகையை தொழுதால் அவனுக்கு நரகத்தை விட்டும் விடுதலையும்இ அதாபு – வேதனையை விட்டும் விடுதலையும் கிடைக்கும். நயவஞ்சகத்தை விட்டும் விடுதலையாகுவான். நூல்: அஹ்மது.

இஃதிகாப் நிய்யத்து வைத்து பள்ளியில் தங்கவும் வேண்டடம். ஒவ்வொரு நாளும் நாயகத்தை ஜியாரத் செய்தபின், அதிலும் குறிப்பாக வெள்ளிக்கிழமையில் ஜன்னத்துல் பகீஃவுக்கு சென்று ஜியாரத்து செய்வது சுன்னத்தாகும்.

முடிந்த அளவு தானங்கள் செய்வதும் நோன்புகள் பிடிப்பதும் சுன்னத்தாகும்.

## ஜன்னத்துல் பகீஃ جنة البقيع

ஜன்னத்துல் பகீஃ சென்றதும்,

اَلسَّلَامُ عَلَيْكُمْ دَارَ قَوْمٍ مُؤْمِنِيْنَ وَاِنَّا اِنْ شَاءَ اللهُ بِكُمْ لَاحِقُوْنَ اَللّٰهُمَّ اغْفِرْ لِاَهْلِ بَقِيْعِ الْغَرْقَدِ اَللّٰهُمَّ اغْفِرْ لَنَا وَلَهُمْ

என்று சலாம் சொல்ல வேண்டும். அதன்பின்,....

1.فَاطِمَةُ الزُّهْرَآءُ بِنْتُ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

2.اِبْرَاهِيم بْنُ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ

3. عُثْمَانُ بْنُ عَفَّانْ رضي الله تعالى عنه

4. عَبَّاسْ رضي الله تعالى عنه

5.حَسَنُ بْنُ عَلِيّ رضي الله تعالى عنهما

6.زَيْنُ الْعَابِدِيْنَ عَلِيُّ بِنُ حُسَيْنُ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُمَا

7. مُحَمَّدُ الْبَاقِرُ بْنُ زَيْنُ الْعَابِدِيْنَ عَلِيّ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُمَا

8.جَعْفَرُ الصَّادِقُ بْنُ مُحَمَّدِ الْبَاقِرُ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ

9.اِسْمَاعِيْلُ بْنُ جَعْفَرِ الصَّادِقِ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ

10.عُثْمَانُ بْنُ مَظْعُوْنُ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ

11.عَبْدُ الرَّحْمٰنِ بْنُ عَوْفٍ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ

12.سَعْدُ بْنُ اَبِيْ وَقَّاصْ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُ

www.sufimanzil.org

13.عَبْدُ اللهِ بْنُ مَسْعُوْدُ رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ

14.حَبَيْشُ بْنُ حُذَّافَةَ السَّهْمِيْ رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ

15.أَسْعَدُ بْنُ زُرَارَةَ رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ

1.ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமை மகள் பாத்திமுத்து ஸுஹ்றா ரழியல்லாஹு தஆலா அன்ஹா.

2.ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமை மகனார் இப்றாஹிம் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

3.உதுமான் இப்னு அப்பான் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

4.அப்பாஸ் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

5.அலி ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மகனார் ஹஸன் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

6.அலி ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மகனார் ஜெய்னுல் ஆபிதீன் அலி ரழியல்லாஹு தஆலா அன்ஹு

7.ஜெய்னுல் ஆபிதீன் அலி ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மகனார் முஹம்மது பாக்கர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

8.முஹம்மது பாக்கர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மகனார் ஜஃபருஸ்ஸாதிக் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

9.ஜஃபருஸ்ஸாதிக் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மகனார் இஸ்மாயீல் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

10.உதுமான் இப்னு மழ்ஊன் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

11.அப்துர் ரஹ்மான் இப்னு அவ்பு ரழியல்லாஹு தஆலா அன்ஹு

12.சஃது இப்னு அபீவக்காஸ் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

13.அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரழியல்லாஹு தஆலா அன்ஹு

14.ஹுபைஷ் இப்னு ஹீதாபத்துஸ்ஸஹ்மி ரழியல்லாஹு தஆலா அன்ஹு

15.அஸ்அது இப்னு ஸுராராஹ் ரழியல்லாஹு தஆலா அன்ஹு

ஆகிய அடையாளம் தெரிந்த இவர்களின் கப்ருகளையும், அடையாளம் தெரியாத மேற்கண்ட சஹாபாக்களையும், "பத்தாயிரம் சஹாபாக்கள் ஜன்னத்துல் பகீஃயில் அடக்கமாகியுள்ளார்கள்" என்று இமாம் மாலிக் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களையும் நினைவு கூர்ந்து சலாம், ஜியாரத் துஆ செய்தபின், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மாமிமார்களான ஸப்பிய்யா நாயகி, அர்வஹா நாயகி, ஆதிகா நாயகி ரழியல்லாஹு தஆலா அன்ஹுன்ன ஆகியோர்களின் கப்றுகளை ஜியாரத் செய்து முடிக்க வேண்டும்.

(வரைபடம் அட்டையின் பின்பக்கம் பார்க்கவும்)

**குறிப்பு:** ஜன்னத்துல் பகீஃயின் கடைசியில் அடங்கப்பட்டுள்ளவர்கள் அபூசயீதுல் குத்ரி ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் என்றும்இ அல்ல அவர்கள் சஃது இப்னு முஆத் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

இமாம் ஹுஸைன் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட பின் அவர்களது சிரசை – தலையை (மதீனாவுக்கு) அனுப்பப்பட்டது. ஜன்னத்துல் பகீஃயில் அவர்களது தாயார் அன்னை பாத்திமா ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது கப்ருக்கு அருகாமையில் அடக்கப்பட்டது என்று இப்னு சஃது ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆதாரநூல்: ஹாஷியத்துல் ஈஹாஹ் பக்கம் 503.

**குறிப்பு:** ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவிமார்களும்இ முஃமின்களுக்கு தாய்மார்களுமான ரழியல்லாஹு தஆலா அன்ஹுன்ன அவர்கள் எட்டு பேர்கள் இதே ஜன்னத்துல் பகீஃயில் வரிசையாக அடங்கப்பட்டுள்ளார்கள். அன்னை கதீஜா நாயகி ரழியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள் மக்கா ஜன்னத்துல் முஅல்லா மையவாடியின் கடைசிப் பகுதியில் அடக்கமாகியிருக்கிறார்கள். அன்னை மைமுனா நாயகி ரழியல்லாஹு தஆலா அன்ஹா அவாக்ள் "சரீப்" என்னும் ஊரில் அடக்கமாகி அங்கு பிரபல்யமாக இருக்கிறார்கள்.

ஆதார நூல்: ஹாஷியத்துல் ஈஹாஹ் பக்கம் 504

## உஹதுடைய ஷுஹதாக்கள்شهداء أحد

உஹது சஹாபாக்களை ஜியாரத் செய்வது சுன்னத்தாகும். அதிலும் வியாழக்கிழமை செய்வது சிறப்பு. ஹம்ஸா நாயகத்தின் கப்ரை முதன்மையாக ஜியாரத் செய்ய வேண்டும்.

அவர்களுடன் ஷஹீதாகி அடங்கியிருப்பவர் ஹம்ஸா நாயகத்தின் சகோதரியின் மகன் அப்துல்லாஹ் இப்னு ஹஜ்ஷ் ரழியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்களாகும்.

உஹது யுத்தத்தில் ஷஹீதானவர்கள் மொத்தம் 70 பேர்கள். இதில் நான்கு பேர்கள் முஹாஜிரீன்கள்இ மற்றவர்கள் அன்சாரிகள் இவர்களும் ஹம்ஸா நாயகத்தின் சூழாக அடங்கி இருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள்

1. முஸ்இபு இப்னு உமர்
2. ஹன்தலா இப்னு அபூ ஆமிர் மலக்குகளால் குளிப்பாட்டப்பட்டவர்கள்.
3. அனஸ் இப்னு நழ்ரு
4. ஸஃது இப்னு ரபீஉ
5. மாலிக் இப்னு ஸினான்
6. அப்துல்லாஹ் இப்னு அம்ரு
7. அபூ ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்

இவர்களுக்கும் ஸலாம் சொல்லிக் கொள்ள வேண்டும்.

## மஸ்ஜிது குபா مسجد قبا

மஸ்ஜிது குபாவை தரிசிக்க வேண்டும். அதில் தொழ வேண்டும் என்ற எண்ணத்தில் செல்வது சுன்னத் முஅக்கதாவாகும்.

قَالَ النبي صلى الله عليه وسلم صلاة في مسجد قبا كعمرة

**'குபா பள்ளியில் தொழுவது உம்ரா செய்வது போலாகும்'** என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பாளர்: திர்மிதி, அஹ்மது

عَنْ سَهْلِ بْنِ حُنَيْفٍ قَالَ رَسُوْلُ اللهِ صَلَى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ تَطَهَّرَفِيْ بَيْتِهِ ثُمَّ اَتٰى مَسْجِدَ قُبَاءٍ فَصَلّٰى

فِيْهِ صَلَاةً كَانَ لَهُ كَأَجْرِعُمْرَةٍ رواه بن ماجه والنسائ

'எவனொருவன் தனது வீட்டில் சுத்தம் (உழு) செய்து பின் குபா பள்ளிக்கு வந்து அதில் (இரண்டு ரக்அத்) தொழுதானோ அவனுக்கு ஒரு உம்ரா செய்தது போன்ற கூலி இருக்கிறது. அறிவிப்பாளர்: இப்னுமாஜா, நஸாயி.

இந்த ஹதீது ஷரீப் குபா பள்ளியில் மிஹ்ரபுக்கு மேலே எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

كَانَ يَأْتِيْ قُبَاءَ كُلَّ سَبْتٍ رَاكِبًا وَمَاشِيًا فَيُصَلِّيْ فِيْهِ رَكْعَتَيْنِ رواه البخاري ومسلم

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நடந்தும், வாகனித்தும் ஒவ்வொரு சனிக்கிழமையும் அங்கு சென்று இரண்டு ரக்அத் தொழுது வருவார்கள் என்றும் ஹதீதில் வந்துள்ளது. ஆதாரம்: புகாரி, முஸ்லிம்.

நாயகம் உமிழ் நீர்விட்ட கிணறும் அந்த பள்ளியின் அருகாமையில் இருக்கிறது. அதன் நீரைப் பருகுவதும் உழு செய்வதும் சுன்னத்தாகும்.

மற்றும் மதீனாவில் இருக்கும் ஏழு கிணறுகளில் தண்ணீர் அருந்துவதும், குளிப்பதுவும், உழு செய்வதுவும் நல்லதாகும்.

**குறிப்பு:** எல்லா கிணறுகளும் மறைக்கப்பட்டு விட்டது. உதுமான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கிணறு மட்டும் அவர்களது தோட்டத்தில் இருக்கிறது. அதற்கு செல்வதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

## وداع المسجد النبوي وقبره الشريف

**புனித மதீனா பள்ளியை விட்டும், பெருமானாரை விட்டும் பிரியா விடை கொடுத்தல்**

தாயகத்திற்கு திரும்ப நாடினால் மதீனா பள்ளிக்குச் சென்று இரண்டு ரக்அத் தொழுது விடை கொடுக்க வேண்டும். அவனுக்கு தேவையான உகப்பானவற்றை கேட்டுக் கொள்ள வேண்டும். பின் கப்ரு ஷரீபுக்கு வந்து ஆரம்பமாக ஜியாரத் செய் சொன்னது போல் ஜியாரத் செய்து துஆக்களை ஓதியபின் இதையும் ஓத வேண்டும்.

اَللّٰهُمَّ لَا تَجْعَلْ هٰذَا آخِرَ الْعَهْدِ بِحَرَمِ رَسُوْلِكَ وَيَسِّرْلِيَ الْعَوْدَ اِلَى الْحَرَمَيْنِ سَبِيْلًا صَهْلَةً وَارْزُقْنِيْ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِى الدُّنْيَا

وَالْآخِرَةِ وَرُدَّنَا سَالِمِيْنَ غَانِمِيْنَ،

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்: ஜனங்களுக்கு ஒரு காலம் வரும்.(அதில்) எனது உம்மத்தினர்களில் பணக்காரர்கள் உல்லாசத்திற்காகவும்,

நடுத்தரமானவர்கள் வியாபாரத்திற்காகவும், காரிமார்கள் (உலமாக்கள்) முகஸ்துதிக்காகவும் பேரும் புகழுக்காகவும், ஏழைகள் யாசகம் கேட்பதற்காகவும் ஹஜ் செய்வார்கள். அறிவிப்பாளர்: அனஸ் ரழியல்லாஹு தஆலா அன்ஹு. ஆதாரம்: தைலமி

ஆகவே وَاَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلّٰهِ அல்லாஹ்வுக்காக ஹஜ், உம்ரா பூர்த்தி செய்யுங்கள். – அல்குர்ஆன் 2:196 என்று அல்லாஹ் சொன்னது போல் தூய எண்ணத்தில் நம் கிரிகைகள் அனைத்தையும் நிறைவேற்றுவாற்றுவோமாக! அதற்கு அல்லாஹ் நல்லருள் புரிவாகனாக. ஆமீன்.

*முற்றும்.*

## விசேஷ இணைப்பு

1.அல்மஸ்ஜிதுல் ஹராமில் (மக்கா பள்ளியில்) தொழுவது ஒரு இலட்சம் நன்மையும், அல்மஸ்ஜிதுன்னபவியில் (மதீனா பள்ளியில்) தொழுவது ஐம்பதாயிரம் நன்மையும், அல்மஸ்ஜிதுல் அக்ஸா(பைத்துல் முகத்தஸ் பள்ளியில்) தொழுவது இருபத்தைந்து ஆயிரம் நன்மை என்றும், மதீனா பள்ளியில் தொழுவது ஆயிரம் நன்மையும், பைத்துல் முகத்தஸல் பள்ளியில் தொழுவது ஐநூறு நன்மையும் என்றும் பலவிதமாக ஸஹீஹான ஹதீதுகள் வந்துள்ளன.

இம்மூன்று பள்ளிகளில் விசேஷமான, அபரீதமான நன்மைகள் தொழுகையைக் கொண்டு மட்டும் (கட்டுப்பட்டதல்ல) குறிப்பானதல்ல. இதர மற்ற எல்லா நன்மையான காரியங்கள், வணக்க வழிபாடுகளைக் கொண்டும் பொருந்திக் கொள்ளும்.

'ஹரம் ஷரீபில் செய்யப்படும் நன்மையான காரியங்களுக்கு ஒரு இலட்சம் நன்மைகள்' என்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆதாரம்: ஈழாஹ் பக்கம் 420, விரிவுரை 54:391 ஹிதாயத்துல் ஸாலிக் பக்கம் 422.

**குறிப்பு: 2**

இல்மஸ்ஜிதுல் ஹராம் என்று குர்ஆன் ஷரீபிலும், ஹதீது ஷரீப்களில் குறிப்பிட்டு வந்துள்ளது. (கஃபாவை சுற்றியுள்ள) மக்கா பள்ளி என்றும், (அதாவது பழமையான பள்ளியும், புதிதாக விஸ்தீரணமாக கட்டப்பட்டுள்ள பள்ளி என்றும்) புனித மக்கமா நகர் என்றும், (மக்கா நகரை சுற்றியுள்ள) ஹரம் என்றும் கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. ஆதாரம்: ஈழாஹ் பக்கம் 436, ஹிதாயத்துஸ் ஸாலிக் பக்கம் 922.

புனித மக்காவுக்கு தரிபட்டிருக்கும் பன்மடங்கு நன்மைகள் (மக்காவை சுற்றியுள்ள) ஹரம் ஷரீபுக்கும், அரபாவுக்கும் தரிபட்டிருக்கிறது என்று இமாம் இப்னு ஹஸ்மு அவர்கள் ஆக்கியிருக்கிறார்கள். ஹிதாயத்துஸ் ஸாலிக் பக்கம் 49

இதைபோன்றுதான் மதீனா பள்ளி என்பது, ரவ்ழா ஷரீபை சுற்றியுள்ள பழமையான பள்ளியும், புதிதாக விஸ்தீரணமாக கட்டப்பட்டுள்ள பள்ளி என்றும், மதீனா நன்னகரை சுற்றியுள்ள ஹரம் என்றும் கருத்து கூறுகிறார்கள்.

எனவே முடிந்தமட்டிலம் தொழுகைகள், மற்றும் வழிபாடுகள், தியானங்களை மக்கா, மதீனா பள்ளிகளிலேயே செய்துவர வேண்டும். முடியாவிட்டால் தங்கி இருக்கும் அறைகளில் செய்து வர வேண்டும். கிடைப்பதரிதான சந்தர்ப்பங்களை கவனக்குறைவாக, பொடுபோக்காக, சோம்பேறித்தனமாக கழித்து விட வேண்டாம்.

**குறிப்பு: 3**

மேற்கண்ட புண்ணிய இடங்களில் எவ்வாறு அதிகமான நன்மைகள் கிடைக்கிறதோ அவ்வாறு தின்மைகளை செய்துவிட்டால் அதைபோல் பன்மடங்கு தின்மைகள் கிடைத்து விடும். அல்லாஹு தஆலா அவைகைள விட்டும் நம்மை காப்பாற்றுவானாக! ஆமீன்.

**குறிப்பு: 4**

عَنْ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنَّهُ جَاءَ اِلٰى زَمْزَمَ فَنَزَعُوْا لَهُ دَلْوًا فَشَرِبَ ثُمَّ مَجَّ فِى الْوِثُمَّ صَبُّوْهُ فِيْ زَمْزَمَ رواه الطّبْرَانِيُ وَغَيْرُهُ وَفِى رِوَايَةٍ لِاَحْمَدَ اَنَّهُمْ لَمَا نَزَعُوا الدَّلْوَ غَسَلَ مِنْهُ وَجْهَهُ وَتَمَضْمَضَ مِنْهُ ثُمَّ اَعَادَهُ فِيْهَا هِدَايَةُ السَّالِكِ ٨٣

ரஸூலுல்லாஹு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜம்ஜம்(கிணற்றி)க்கு வந்தார்கள். (ஜனங்கள்) ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக ஒரு வாளி தண்ணீர் இறைத்துக் கொடுத்தார்கள். அவர்கள் (அதில் கொஞ்சம்) குடித்தார்கள். பின்பு வாளியில் உமிழ்ந்தார்கள். பின்பு(உமிழ்ந்த வாளி தண்ணீரை) ஜம்ஜம் (கிணற்றி)ல் ஊற்றினார்கள். அறிவிப்பாளர்: தப்ரானியும் மற்றவர்களும்.

இமாம் அஹ்மது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மற்றுமொரு அறிவிப்பில்:-

ஒரு வாளி தண்ணீர் இறைத்து கொடுத்தார்கள். ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதிலிருந்து முகத்தை கழுகினார்கள். வாய் கொப்பளித்தார்கள். பின்பு அதை கிணற்றில் மீட்டி (ஊற்றி)னார்கள். ஆதாரம்: ஹிதாயத்துஸ் ஸாலிக் பக்கம் 83

காருண்ய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கருணை, கிருபையை பாருங்கள்! அருமை சஹாபாக்கள் நாயகத்தோடு அண்டிப் பழகி அமுதவாய் புனித நீரைக் கொண்டும், உழுவு செய்த தண்ணீரைக் கொண்டும், சளி, காரல், இரத்தம், முடி, ஆடை, உணவு

மற்றும் சாமான்களைக் கொண்டும் பறக்கத்து பெற்றதை போன்று கியாமத் நாள்வரை வரும் தங்களது உம்மத்தினர்களும் அமுத நீரைப் பருகி பறக்கது பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கலந்திருக்கிறார்கள். சுப்ஹானல்லாஹ்.

நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும், அன்னை ஹாஜரா அலைஹஸ்ஸலாம் அவர்களுக்கும் கிடைத்த பறகத் கியாமத் நாள்வரை வற்றாத ஊற்றாக இருந்து உலகமக்களுக்கு பறக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் உலக அதிசயங்களில் ஒன்றான ஜம்ஜம் தண்ணீருடன் நாயகத்தின் அத நீரும் கலந்திருப்பது பறகத்திற்கு மேல் பறக்கத்தாகும். அல்ஹம்துலில்லாஹ். ஜம்ஜம் தண்ணீர் அருந்தும்போது நாயகத்தின் பறக்கத்தும் கலந்திருக்கிறது என்ற கவனத்தையும் நினைவு கூர்ந்து கொள்ளுங்கள்.

**குறிப்பு: 5**

عَنْ جَابِرٍ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَاءُ زَمْزَمَ لِمَاشُرِبَ لَهُ رواه اَحْمَدُ وَابْنُ

مَاجه وَالْبَيْهَقِيْ

ஜம்ஜம் தண்ணீர் எதற்காக குடிக்கப்படுகிறதோ அதற்கான (நோக்கத்திற்கான)தாகும். அறிவிப்பாளர்: ஜாபிர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு ஆதாரம்: அஹ்மது, இப்னுமாஜா, பைஹகீ.

பெரும்பெரும் உலமாக்கள் (இந்த ஹதீதின்படி) அவர்களது நாட்டங்களுக்கு குடித்து பயன் பெற்றுள்ளார்கள். எந்த நோக்கத்தை நினைத்து குடித்தாலும் நிறைவேறும். எனவே நல்ல நாட்டம் தேட்டம், நோய் நிவாரணம், கல்வி, செல்வம், அபிவிருத்தி, மன்னிப்பு எதை எல்லாம் நாட வேண்டுமோ அத்தனையும் நாடி குடித்துக் கொள்ளவும். மூன்று தடவையாகவும், மூன்று மூச்சு விட்டு குடிப்பதும், ஒவ்வொரு தடவையின் ஆரம்பத்தில் 'பிஸ்மில்லாஹ்' என்று சொல்வதும், கடைசியில் 'அல்ஹம்துலில்லாஹ்' என்று சொல்வதும், வயிறு நிறம்ப குடிப்பதும், முகத்தையும், நெஞ்சத்தையும் (நோய் உள்ள பகுதிகளையும்) கழுகுவதும், தலையின் மீது ஊற்றிக் கொள்வதும், உட்கார்ந்து கொண்டு குடிப்பதும் சுன்னத்தாகும்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜம்ஜம் தண்ணீரை நின்று(கொண்டும், தலையை திறந்துக் கொண்டும்) குடித்தார்கள் என்று வந்துள்ள ஹதீது (இஹ்ராமுடன் இருந்ததால் தலை திறந்தவர்களாகவும்) ஜன நெருக்கடியாக இருந்ததாலுமாகும். (நின்று குடிப்பதும் ஆகும் என்பதை காட்டுவதற்காகவுமாகும்) ஆதாரம்: ஹாஷியத்துல் ஈழாஹ் பக்கம் 442.

**குறிப்பு: 6**

புனிதமிகு மக்கா, மதீனா நன்னகருக்குள்ளான இடங்களிலிருந்து மண், கற்கள் போன்றவற்றை தன்து ஊருக்கோ, வேறு இடங்களுக்கோ எடுத்து வருவது ஹராம் - கூடாது. அப்படி தெரியாமல் பரகத்திற்காக கொண்டு வந்து விட்டாலும் திரும்பவும் எடுத்த இடத்தில் கொண்டு போய் போட்டு விட வேண்டும்.

இதைப் போல் கஃபத்துல்லாஹ்வின் மணமான பொருள்கள், போர்வைகளையும் அதில் அருந்துள்ள நூல்களையும் பரகத்திற்கானாலும் வெட்டி எடுப்பதும், விற்பதும், வாங்குவதும், பறக்கத்திற்கு குர்ஆன் ஷரீபில் பேப்பர்களின் மத்தியில் வைப்பதும் கூடாது.

கஃபத்துல்லாஹ்வின் பரக்கத் வேண்டுமானால் அத்தர் போன்ற மணமானவைகளையும், துணிகளையும் கொண்டு சென்று அதன் மேல் வைத்து விட்டு கொண்டு வரலாம். இதைப்போல் தவறி கிடக்கும் எந்தப் பொருள்களையும் எடுக்கவும் கூடாது. எடுத்துவிட்டால் உரியவர்களை விசாரித்து அவர்களிடம் ஒப்படைப்பது நம் கடமையாகி விடும். அவைகளைப் பார்த்தாலும் பார்க்காததை போல் சென்று விட வேண்டும்.

இன்னும் அங்குள்ள உண்ணுவது ஹலாலான, ஹராமான மிருகங்கள், பிராணிகள், பறவைகளை வேட்டையாடுவதும் ஹராம் - கூடாது. வேட்டையாடிவிட்டால் அதற்கான பரிகாரத்திற்கு விரிவான சட்டங்கள் இருக்கின்றன.

**குறிப்பு:7**

ஹாஜமார்களையும், உம்ரா செய்பவர்களையும் வழி அனுப்புதலும், வரவேற்பதும்

1. عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَلْحُجَّاجُ وَالْعُمَّارُ وَفْدُ اللهِ اِنْ دَعَوْهُ

اَجَابَهُمْ وَاِنِ اسْتَغْفَرُوْا غَفَرَلَهُمْ رَوَاهُ ابْنُ مَاجه

2. عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَللهُمَّ اغْفِرْ لِلْحَاجِّ وَلِمَنْ اِسْتَغْفَرَ

لَهُ الْحَاجُّ رَوَاهُ الْبَيْهَقِي

3. وَعَنْهُ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اِذَا لَقِيْتَ الْحَاجَّ فَصَافِحْهُ وَسَلِّمْ عَلَيْهِ وَمُرْهُ اَنْ يَسْتَغْفِرَ لَكَ قَبْلَ اَنْ

يَدْخُلَ بَيْتَهُ فَاِنَّهُ مَغْفُوْرٌ لَهُ رَوَاهُ الامام احمد هداية السالك ١٦،١٧

4. وَعَنْ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنَّهُ اِسْتَأْذَنَهُ فِى الْعُمْرَةِ فَأَذِنَ لَهُ فَقَالَ يَا اُخَيَّ

لَاتَنْسَنَا فِيْ دُعَائِكَ وَفِيْ لَفْظٍ يَا اُخَيَّ اَشْرِكْنَا فِيْ دُعَائِكَ فَقَالَ عُمَرُ مَا اُحِبُّ اَنَّ لِيْ بِهَا مَا طَلَعَتْ عَلَيْهِ الشَّمْسُ

لِقَوْلِهِ يَا اُخَيَّ رواه الامام احمد هداية السالك ١٦

5. وَيُسْتَحَبُّ لِمَنْ يُسَلِّمُ عَلَي الْقَادِمِ الْحَجِّ اَنْ يَقُوْلَ قَبِلَ اللّٰهُ حَجَّكَ وَغَفَرَ ذَنْبَكَ وَاَخْلَفَ نَفَقَتَكَ هداية

السالك ١٤٢٧

1. ஹாஜிமார்களும், உம்ரா செய்பவர்களும் அல்லாஹுதஆலாவின் அணியினர். அவர்கள் அவனிடம் துஆ கேட்டால் பதில் கொடுப்பான். பிழை பொறுக்கத் தேடினால் அவர்களுக்கு பிழை பொறுப்பான் என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு தஆலா அன்ஹு. நூல்:இப்னுமாஜா

2. இறைவா! ஹாஜக்கும், ஹாஜி பிழை பொறுக்கத்தேடுபர்களுக்கும் பிழை பொறுப்பாயாக! என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துஆ செய்தார்கள். அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு தஆலா அன்ஹு நூல்: பைஹகீ

3. ஹாஜியை நீ சந்தித்தால் அவரோடு முஸாபஹா செய்! அவருக்கு சலாம் சொல்! அவரது வீட்டிற்கு நுழைவதற்கு முன் உனக்கு பிழை பொறுக்க ஏவுவீர்! நிச்சயமாக அவர் பிழை பொறுக்கப்பட்டுள்ளார். அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு தஆலா அன்ஹு நூல்: இமாம் அஹ்மது, ஹிதாயத்துஸ் ஸாலிக் பக்கம் 16,17

4. உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் உம்ரா செய்வதற்கு அனுமதி கேட்டார்கள். அனுமதி கொடுத்து விட்டு சொன்னார்கள். யாஉகைய்ய – என் சின்ன சகோதரனே! – தம்பியே! உனது துஆவில் எங்களை மறந்து விடாதே!

இன்னுமொரு அறிவிப்பில், உமது துஆவில் எங்களையும் கூட்டாக்கி கொள்! அறிவிப்பாளர்: உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு நூல்: இமாம் அஹ்மது.

யா உகைய்ய – என் சின்ன சகோதரனே! – தம்பியே! என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னை அழைத்ததினால், சூரியன் எதன் (பொருள்) மீது உதிக்கின்றதோ (அதாவது,உலகப் பொருள்கள் அனைத்தும்) அவைகள் எனக்கு இருப்பதை ஆசிக்கவில்லை. (அதாவது, இப்படி அழைத்ததுதான் எனக்கு எல்லாவற்றையும் விட எனக்கு பிரியமாக இருக்கிறது) அறிவிப்பாளர்: உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு. நூல்: இமாம் அஹ்மது, ஹிதாயத்துஸ் ஸாலிக் பக்கம் 15

5.ஹஜ்ஜிலிருந்து வருகை செய்பவருக்கு சலாம் சொல்லி, உங்களது ஹஜ்ஜை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக! உங்களது பாவத்தை மன்னிப்பானாக! நீங்கள் செலவளித்ததற்கு பகரமாக்குவானாக! என்று சொல்வது சுன்னத்தாகும். நூல்: ஹிதாயத்துஸ் ஸாலிக் பக்கம் 1427

**குறிப்பு: 8**

திருமணத்திற்கு 'வலீமா' என்றும், குழந்தை பிறந்ததற்கு 'அகீகா' என்றும், கட்டடம் கட்டியதற்கு 'வகீரா' என்றும், குர்ஆன் மனனமாக்கியதற்கு 'ஹிதாக்' என்றும், முஸீபத்து நீங்கியதற்கு 'வழீபா' என்றும், பிரயாணத்திலிருந்து வரும்போது 'நகீஆ' என்றும் பதினொரு(விதமான) விருந்தோம்பல்கள் சுன்னத்தாகும். நூல்: இஆனத்துத் தாலிபீன் பாகம் 3, பக்கம்363

(ஊர்) வரும்போது உணவு கொடுப்பது பிரயாணிக்கு சுன்னத்தாகும். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா நன்னகருக்கு வருகை தந்த பொழுது ஒரு ஒட்டகம் அல்லது ஒரு மாடு அறுத்(து விருந்துக் கொடுத்)தார்கள் என்று ஜாபிர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அறிவித்தார்கள். ஆதாரம்: பைஹகீ. நூல்டு ஹிதாயத்துஸ் ஸாலிக் பக்கம் 1425

எனவே புண்ணியமான ஹஜ், உம்ரா பயணத்தில் இருந்து ஊர் திரும்பி வரும்போது 'நகீஆ' என்ற விருந்து கொடுப்பது சுன்னத்தான வழிமுறையாகும். பித்அத்தும் அல்ல, வீண் விரயமும் அல்ல.

**குறிப்பு: 9**

பயணிகள் (ஊருக்கு வரும்போது) தங்களது குடும்பத்தினர்களுக்கு வெகுமதியான பொருள்களை தன்னுடன் எடுத்து வருவது சுன்னத் என்று சில உலமா பெருந்தகையோர் கூறியிருக்கிறார்கள்.

'உங்களில் ஒருவர் பிரயாணத்திலிருந்து வருகை தந்தால் தங்கள் குடும்பத்தினர்களுக்கு வெகுமதி கொடுக்கட்டும். கல்லானாலும் (அதாவது விலையில்லாத சிறிய பொருளானாலும்) புதிதான பொருளை கொண்டு வரட்டும்' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: ஆயிஷா ரழியல்லாஹு தஆலா அன்ஹா நூல்: தாரகுத்னி

முடிந்தமட்டிலும் வருகை தரும்போது குடும்பத்தினர்களின் எதிர்பார்ப்புகள் இருப்பதாலும், அவர்களது மனதுகளை நிவர்த்தியாக்கவும்(சந்தோஷமாக்கவும்) கொஞ்சமானாலும் பொருள்களை கொண்டு வர வேண்டும். இதை காழி அபூதய்யிபு ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தெளிவாகவே கூறியிருக்கிறார்கள். இமாம் நவவி ரழியல்லாஹு தஆலாஅன்ஹு அவர்களும் மஜ்மூவு எனும் கிரந்தத்தில் கூறியிருக்கிறார்கள். நூல்: ஹிதாயத்துஸ் ஸாலிக் விரிவுரை பக்கம்1422.

இவ்வடிப்படையில்தான் நம் முன்னோர்களும், நம்மவர்களும் பிரயாணத்திலிருந்து வரும்போது, அதிலும் ஹஜ், உம்ரா, ஜியாரத் பயணத்திலிருந்து வரும்போது வெகுமதி கொடுப்பதற்காகவே தின்பண்டங்கள், துணிமணிகள், சிறுவர்களுக்கு கவர்ச்சியான விளையாட்டு சாமான்கள், ஜம்ஜம் தண்ணீர், ஈத்த பழம், தஸ்பீஹ் மணி, அத்தர், தொப்பி, லேஞ்சி முதலியவைகளை கொண்டு வந்து, குடும்பத்தார்கள், உறவினர்கள், அன்பர்கள், உஸ்தாதுமார்கள், அண்டை வீட்டினர்களுக்கு கொடுத்து சந்தோஷமாக்கினார்கள்.


நாமும் ஹதீது அடிப்படையிலும், உலமாக்களின் கூற்றிற்கும், வழக்கத்திற்கும் ஏற்றவாறு பிரயாணத்தில் இருந்து அதிலும் புனித 'ஹஜ், உம்ரா, ஜியாரத்' பயணத்திலிருந்து வருகை தரும்போது இதை மேற்கொள்வோம். மேலும் எல்லா ஊர்களிலும் இவ்வழக்கம் இருந்து வருவது பாராட்டத்தக்கதாகும்.

**குறிப்பு: 10**

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: (புனித மதீனா நன்னகரில் உற்பத்தியான) ஏழு அஜ்வா ஈத்தப்பழத்தை அதிகாலையில் சாப்பிட்டால் அன்று விஷம், சூனியம் தீண்டாது. நூல்: புகாரி, முஸ்லிம்.

உயர்தரமான அஜ்வா ஈத்தப்பழத்தில் நோய் நிவாரணமிருக்கிறது. அதிகாலை(யில் உண்ணப்படும்) ஔடதமாகும். அஜ்வா சொர்க்கத்திலிருந்து (வந்து)ள்ளது. அதன் தண்ணீர் நஞ்சிலிருந்து நோய் நிவாரணமாகும். முஸ்லிம், ஹாஷியத்துல் ஈழாஹ் பக்கம் 520.

وَصَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَنَبِيِّنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِيْنَ ، وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ


ஜன்னத்துல் பகீஃ மதீனா
அபூ சயீதுல் குத்ரி ரலியல்லாஹு அன்ஹு
நான்காம் கலீபா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயார் பாத்திமா பின்து அஸது ரலியல்லாஹு அன்ஹா
ஹலீமத்து ஸஃதியா ரலியல்லாஹு அன்ஹா
மூன்றாம் கலீபா உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு
பழைய ஜன்னத்துல் பகீஃ எல்கை
இமாம் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு
இமாம் நாபிஃ ரலியல்லாஹு அன்ஹு
ரஸூலுல்லாஹ்வின் அருமை மகனார் இப்ராஹீம் ரலியல்லாஹு அன்ஹு
உஹது போரில் கலந்து கொண்டு, பின்பு மரணமான சஹாபாக்கள்
ரஸூலுல்லாஹ்வின் மனைவிமார்கள் :
1. ஜுவைரிய்யா ரலியல்லாஹு அன்ஹா
2. சவ்தா ரலியல்லாஹு அன்ஹா
3. ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா
4. ஹப்ஸா ரலியல்லாஹு அன்ஹா
5. உம்மு ஹபீபா ரலியல்லாஹு அன்ஹா
6. உம்மு சல்மா ரலியல்லாஹு அன்ஹா
7. சபிய்யா ரலியல்லாஹு அன்ஹா
8. ஜைனப் ரலியல்லாஹு அன்ஹா
அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சகோதரர் உகைல் ரலியல்லாஹு அன்ஹு
அப்துல்லாஹ் இப்னு ஜஃபருத் தய்யார் ரலியல்லாஹு அன்ஹுமா
இமாம் ஜஃபர் சாதிக் ரலியல்லாஹு அன்ஹு
இமாம் முஹம்மது பாக்கர் ரலியல்லாஹு அன்ஹு
இமாம் ஜைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு
இமாம் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு
அன்னை பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா
ரஸூலுல்லாஹ்வின் பெண்மக்கள் :
1. ஜைனப் ரலியல்லாஹு அன்ஹா
2. உம்மு குல்தூம் ரலியல்லாஹு அன்ஹா
3. ருகைய்யா ரலியல்லாஹு அன்ஹா
ரஸூலுல்லாஹ்வின் மாமிமார்கள் :
1. ஸபிய்யா ரலியல்லாஹு அன்ஹா
2. ஆதிகா ரலியல்லாஹு அன்ஹா
3. அர்வஹா ரலியல்லாஹு அன்ஹா
அசல் வழி
செய்யிதுனா அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு